விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 10 திங்கட்கிழமை (23.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094




# தமிழ் மக்களின் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும்

## விடுதலைப் புலிகள் அழைப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் நலன்களுக்கு எதிராக நாம் ஒருபோதும் செயற்பட்டதில்லை. அவ்வாறு செயற்படும் நோக்கமும் எமக்குக் கிடையாது. இந்தியா எமக்கு அருகில் இருந்து தமிழர் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நவநீதம்பிள்ளை இந்தியா விஜயம் இன்று பிரணாப்புடன் சந்திப்பு!



(புதுடில்லி)

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தியா சென்றுள்ள இவர், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இன்று சந்திக்கவுள்ளார்.

இலங்கையில் மோதல் பகுதிகளிலுள்ள மக்களின் மனித உரிமைகள் தொடர்பாக அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்த நவநீதம்பிள்ளையின்

(12ஆம் பக்கம் பார்க்க)


## ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கைக்கு கடும் கண்டனம்

(சுவிஸ்)

சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் பத்தாவது கூட்டத்தொடரில் பல நாடுகளினால் இலங்கை கண்டிக்கப்பட்டதுடன் ஐக்கியநாடுகள்மனிதஉரிமைஆணையாளரினது கண்டனத்திற்கும் ஆளாகியுள்ளது.

இதேவேளையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் பத்தாவது கூட்டத்

(12ஆம் பக்கம் பார்க்க)




## புதுமாத்தளனுக்கு மருந்துகள் சென்றன

(கொழும்பு)

அரசாங்கம் அனுப்பிய ஒரு தொகுதி அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தங்களிடம் வந்து சேர்ந்துள்ளதாகவும் அவற்றைக் கொண்டு குறைந்த பட்சம் இரண்டு வார காலமாவது தங்களால் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவ மனையை நடத்த முடியும் என்றும் முல்லைத் தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறியுள்ளார்.

விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் விவகாரத்தால் ஐ.நாவில் நாடுகளிடையே பிளவு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் இரு வேறுபட்ட கருத்துக்கள் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக விவாதம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஒஸ்ரியா, மெக்சிக்கோ, கோஸ்ராறிக்கா ஆகிய நாடுகளின் ஊடாக அமெரிக்கா முன்வைத்துள்ளது.

வன்னியில் பொதுமக்கள் கொல்லப்படுவது தொடர்பான

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரணைப்பாலை,புதுக்குடியிருப்பு பகுதிகளில் தொடர்ந்தும் மோதல்

(கொழும்பு)

வன்னியில் பல பகுதிகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன . இதில் இரு தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

மோதல்களின்போது பின்னகர்ந்துள்ள புலி உறுப்பினர்கள் தற்போது சுமார் 25 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டுள்ளனர் என்றும் மோதல்களை அடுத்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிச் சண்டை குறித்து விரைவில் புதுத் தகவல்

### பிரதமர் உரை

(கொழும்பு)

வன்னியிலே நடந்துவரும் சண்டை தொடர்பாக விரைவில் சில முக்கிய தகவல்கள் வெளியாகும் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், விடுதலைப்புலிகள் வசமிருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி பாதுகாப்பு வலயத்தில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன

## நேற்று 9 சிறுவர்கள் உட்பட 34 பேர் பலி

(வவுனியா)

வன்னியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் எறிகணைத் தாக்குதல்களில் நேற்றும் 9 சிறுவர்கள் உட்பட 34 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆட்லறி எறிகணை, பல்குழல், மோட்டார்

(12ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

## புலிகளின் தலைவர் பிரபாகரன் முல்லைத்தீவிலேயே உள்ளார்

### பாதுகாப்புச் செயலர் உறுதி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், கடற்படைத்தளபதி சூசை மற்றும் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளர் பொட்டு அம்மான் ஆகிய முக்கிய தலைவர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

4R-10 /= மட்டுமே

10X15=75/-

அல்பங்கள், பிலிம் ரோல் போன்றனவற்றையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, நெல்லியடி.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு?

# பொலிஸ் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம்

## சர்வதேச அழுத்தத்தால் நடவடிக்கை

(கொழும்பு)

**மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**இந்நிலையில் பொலிஸ் அதிகாரங்களும் மாகாணமட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது; மோதல்கள் முடிபடையும் தறுவாயிலிருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கிற்கு அதிகாரங்களைப் பகிர வேண்டுமென அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

திடீரென பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாகக் கட்டமைப்பை மாற்றிய பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண, புதிய சுற்று நிருபத்துக்கமைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை தமக்குரிய மாகாணங்களிலேயே அலுவலகங்களை அமைத்துப் பணியாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொலிஸ் வரலாற்றில் இவ்வாறு திடீரென நிர்வாக மாற்றம் செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையென சுட்டிக் காட்டப்படுகிறது.

ஒவ்வொரு மாகாணங்களுக்கும் பொறுப்பாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதும் அவர்கள் பொலிஸ் தலைமையகத்திலிருந்தே பணியாற்றி வந்தனர். எனினும் தம்மை சொந்த மாகாணங்களிலேயே அலுவலகங்களை அமைத்துப் பணியாற்றுமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருப்பதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் மாநிலங்களில் கையாளக் கப்படுவதைப் போன்றே இங்கும் பொலிஸ் நியமனங்கள் அமையவிருப்பதாக அவர் கூறி யுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தில் தற்பொழுது 10 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களில் மூவர் தலைமையகத்தில் பணியாற்றுவதுடன் ஏனைய ஏழு பேரும் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் பொறுப்பாக நியமிக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கும் அப்பால் தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென இந்தியா, இலங்கைக்கு தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையிலேயே பொலிஸ் நிர் வாகத் தில் இவ்வாறானதொரு மாற்றம் நடைபெற்றுள்ளது.

(ச-5)




கியூமெடிக்கா நிறுவனத்தால் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நிஷா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கான உணவுப் பொருட்கள் கடந்த 13.03.2009அன்று வழங்கப்பட்டன. கியூமெடிக்கா நிறுவனத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், பயனாளி ஒருவருக்கு பொருட்களை வழங்குவதை படத்தில் காணலாம் (14)

## திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்தியம்

# பட்ட மேற்கல்வி டிப்ளோமாவுக்கு தெரிவானோரின் பெயர் விபரம்

## இன்று முதல் பதிவு இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியை 2009/2010 கல்வி ஆண்டில் மேற்கொள்வதற்காக போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் தெரிவு செய்யப் பட்டவர்களின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று 23 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வரை தமது பதிவுகளை யாழ்.பிராந்திய நிலையத்தில் பதிவு செய்ய முடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பதிவு செய்யும் போது பிறப்புச் சான்றிதழ், பட்டச் சான்றிதழ், முதல் நியமனக்கடிதம், அதிபர் அல்லது நிறுவனத் தலை வரிடமிருந்து பெறப்பட்ட சேவைச்சான்றிதழ், கற்பித்தல் பயிற்சிக்கான அதிபரின் கடிதம் என்பவற்றின் மூலப் பிரதிகளையும் புகைப்படப் பிரதிகளையும் எடுத்து வருமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

பட்ட மேற்கல்வி டிப்ளோமாவுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

வ.சசிக்குமார்-மருதனார்மடம், சி.மதன மோகனராஜ்-குப்பிளான் வடக்கு, திருமதி காமினி சந்திரபாலன் -சாவகச்சேரி, சி.சதீஸ்வரன்-இராசாவின் தோட்டம், க.சிவராசா -ஏழாலை, த.மதியரசி-தாவடி தெற்கு, ச.பிருந்தா-பருத்தித்துறை, இ.நாகநாதன்-கொடிகாமம், ல.கவிதா-அச்சுவேலி, அ.திருமகன்-யாழ்ப்பாணம், அ.அங்கையற்கண்ணி-நல்லூர், ச.அரவிந்தன்-சுழிபுரம், ரா.தமிரா-கொடிகாமம்,

ப.பாலமுரளிதரன்-திருநெல்வேலி, கி.சரஸ்வதி-மீசாலை, ச.புஸ்பாகரன்-பண்டத்தரிப்பு, ந.ஜெயரூபி-மட்டுவில் வடக்கு, வே.அன்பழகன்-கோண்டாவில், கு.யாழினி -சித் தன்கேணி, செ.சதீஸ்குமார்-மானிப்பாய், தே.றொபேசன்-கொக்குவில், ப.ரகுமார்-கட்டைப்பிராய், கு.பிரியதர்சி-ஏழாலை, கி.ராஜினி-தெல்லிப்பழை, ச.ஜெயந்தினி-நீர்வேலி, தி.மகேஸ்வரன்-பருத்தித்துறை, ப.சுபாந்தினி -கோண்டாவில், ம.கஜேந்தினி-மட்டுவில் வடக்கு, பே.அருட்செல்வி- யாழ்ப்பாணம், பா.சுதாகரன்-அளவெட்டி, வே.பவதரன்-தொண்டைமானாறு, சோ.முகுந்தன்-நாயன்மார் கட்டு, த.கண்ணதாசன்-காரைநகர்,

கு.வசந்த மாரன்-யாழ்ப்பாணம், சே.பரிமளா-சுழிபுரம், க.சுதாகரன்-கரவெட்டி, ரா.நஜன்-கொக்குவில், தி.தேவகி-வல்வெட்டித்துறை, அ.அனி ஷ்ரா ஜெயக்குமாரி -யாழ்ப்பாணம், ம.தேவரூபன்-சண்டிலிப்பாய், ஞா.பிரதீபன்-திருநெல் வேலி, ந.திருவாசகன்-வரணி,

கி.தர்மசீலன்-கோப்பாய், கு.திருவேணி திருலோஜினி-திருநெல்வேலி வடக்கு, சொ.நந்தகுமார்-சாவ கச்சேரி, ந.சிவமதி-சாவகச்சேரி, சு.வைதேகி -கொக்குவில், சி.துசிதா-கரவெட்டி, ச.யசிந்தன் -நீர்வேலி, க.செந்தூரன்-அச்சுவேலி, சி.சிவச் செல்வன்-சுன்னாகம், சோ.சிறீஸ்கந்தராஜா-யாழ்ப்பாணம்.

(ச)

## உள்ளூர் உற்பத்திகளை அனுப்பவுள்ளோருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் இருந்து உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஏ-9 பாதையூடாக கொழும்பிற்கு அனுப்புவதற்காக மாவட்டச் செயலகத்திற்கு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தவர்கள் பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்புவதற்கு உரிய இணைப்பு நிறுவனமான யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

குறித்து சம்மேளனத்தின் ஊடாகவே யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்பிற்கு ஏ-9 பாதையூடாக அனுப்பவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் வகை, அளவு ஆகியவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். எனவே விவசாயிகள் கூடம், திருநெல்வேலி எனும் முகவரியில் உள்ள யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(ச)

# யானையின் முகச் சாயலுடன் பிறந்த அதிசய ஆட்டுக்குட்டி

(ஏழாலை)

சுன்னாகம் கோடைக்காடு பகுதியில் அதிசய ஆட்டுக்குட்டி ஒன்று பிறந்துள்ளது. யானையின் முகத்தையும் குதிரையின் கால்களையும் போன்ற உருவ அமைப்புடன் பிறந்த அவ் ஆட்டுக்குட்டி பிறந்த சிலமணி நேரத்துள் உயிரிழந்துள்ளது.

சுன்னாகம் கோடைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில் வசித்து வரும் பொன்னையா பறுபதம் என்பவரின் ஆடே நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இவ் அதிசயக்குட்டியை ஈன்றுள்ளது.

ஆட்டுக்குட்டியின் முகம் யானையின் முகத்தை ஒத்ததாக தும்பிக்கையுடனும் பெரிய கண் களையும்கொண்டதாக காணப்பட்டது. கால்கள் குதிரையின் கால் அமைப்பைப் போன்று இருந்தது.

இவ் அதிசய ஆட்டுக்குட்டி குறித்த செய்தி பரவியதையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் அதனை சென்று பார்வையிட்டனர். எனினும் அக்குட்டி பிறந்த ஒரு மணி நேரத்தினுள் உயிரிழந்துள்ளது.

(ச)

# கிழக்கு பல்கலைக்கழக மாணவி தீக்குளித்துத் தற்கொலை

மட்டக்களப்பில் உள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று வரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தமாணவி ஒருவர் நேற்று தனக்குத்தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கலைப் பீடத்தின் மூன்றாம் வருட மாணவியான இவர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ரவீந்திரன் நிதர்சனா (வயது 24) என்பவரே தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் உள்ள குளியலறையில் இந்த மாணவி தனக்குத் தானே தீ மூட்டினார் என்றும் இவரின் அலறல் சத்தம் கேட்டு சகமாணவர்கள் குளியலறையின் கதவினை உடைத்து மாணவியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் வழியிலேயே மாணவியின் உயிர் பிரிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்கொலை செய்துகொண்ட பிரஸ்தாப மாணவி மனநிலை பாதிப்புக்காரணமாக சிகிச்சை பெற்று வந்ததாக மட்டக்களப்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடின் குணதிலக தெரிவித்தார்.

இதேவேளை பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கு இதனால் எவ்வித பாதிப்பும் இல்லையெனவும் பரீட்சைகள் நடைபெறுவதாகவும் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி என்.பத்மநாதன் குறிப்பிட்டார்.

(ச-3,5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இன்று ஒரு தகவல்

## நன்றி மறப்பது நல்லது

ஒரு பெரிய ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அதைக்கடந்து செல்வதற்காக எட்டுப்பேர் நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரும் பண்டிதர்கள். அறிவாளிகள்.

எல்லோரும் அந்த ஆற்றைக் கடந்து அடுத்த கரைக்குப் போய் அங்கிருந்து பக்கத்திலுள்ள ஊருக்குப் போகவேண்டும்.

கரையோரமாக ஒரு படகு கட்டியிருந்தது அதில் ஏறி உட்கார்ந்தார்கள். அதன் மூலமாக அடுத்த கரையை அடைந்தார்கள். அங்கே போய் கரையேறியவுடன் அவர்களுக்குள் ஒரு விவாதம்.

ஒருவர் சொன்னார்;

"இந்தப் படகு நமக்கு உதவி செய்திருக்கிறது. அதன் மூலமாகதான் நாம் ஆற்றைக் கடந்து இக்கரைக்கு வந்திருக்கிறோம். இது செய்திருக்கும் உதவிக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். அதை எப்படிச் செய்வது?" என்றார்.

இன்னொருவர் அதற்கு யோசனை சொன்னார். " நமக்கு உதவி செய்திருக்கும் இந்தப் படகுக்கு மரியாதையும் நன்றியும் செலுத்தும் வகையில் அதை நாம் எல்லோரும் நம் தலை மேல் சுமந்து செல்வதுதான் நியாயம்" என்றார்.

இதுதான் சரியான யோசனை என்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்.

அவ்வளவு தான். உடனே எல்லோரும் அந்தப்படகைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள் அப்படியே அவர்கள் போக வேண்டிய கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவ்வூர் மக்களுக்கு இது வேடிக்கையாக இருந்தது. ஆச்சரியமாக இவர்களைப் பார்த்து, " எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். " படகு என்பது மனிதர்களைக் கரை சேர்ப்பதற்காகத்தானே இருக்கிறது? நாம் எதற்காக அதை சுமக்க வேண்டும்? அதை ஆற்றங்கரையிலேயே விட்டு விட்டு வந்திருக்கலாமே? " என்றார்கள்.

அதற்கு அவர்களில் ஒருவர் ", என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? உங்களுக்க நன்றி உணர்வே கிடையாதா? நாங்கள் நன்றியுடையவர்கள் அதனால்தான் எங்களைக் கரைசேர்த்த படகுக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். இந்தப் படகு எப்பொழுதும் எங்கள் தலை மேல்தான் இருக்கும்!" என்றார்.

இந்தக்கதையை புத்தர் கூறியிருக்கிறார். வழி இருக்கிறது. ஆனால் அதையே முடிவென்று நினைத்து வாழ் நாள் முழுவதும் பிடித்துக் கொண்டு மனிதர்கள் துன்பப்படுகிறார்கள் என்பது அவருடைய கருத்து .

ஒரு மனிதன் பிரார்த்தனை செய்கிறான், வழிபாடு செய்கிறான். அதன் மூலமாக ஒரு விழிப்புணர்வு கிடைத்து விட்டது. என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்குப் பின்னர் எதற்கு அந்த பிரார்த்தனையும் வழிபாடும்? தூக்கி எறிய வேண்டியது தானே!

ஆனால் மனிதன் அப்படிச் செய்வதில்லை. வழிபாட்டையே இலட்சியமாக வைத்துக்கொண்டு அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வான்.

அந்தப் பிரார்த்தனைக்கு அவன் கைதியாகி விடுகிறான் அதனால் அதைவிட்டு அவனால் வெளியில் வர முடியவில்லை.

வழிபாடு மூலமாக சாதித்து விடலாம் என்று நினைப்பது தவறு என்கிறார் ஓஷோ.

பிரார்த்தனை என்பது ஒரு முள். காலில் குத்திய முள்ளை எடுப்பதற்கு இன்னொரு முள்ளைப் பயன்படுத்துகிறோம். முள்ளை எடுத்துவிட்டால்.... இரண்டு முள்ளையும் வீசி எறிந்து விட வேண்டியது தானே? இரண்டு முள்ளுக்குமே இனிப் பயனில்லை. பழைய முள் இருந்த இடத்தில் புதிய முள்ளைக் குத்தி வைத்தால் வலிதான் தொடரும். அப்படிச் செய்பவன் முட்டாள் ஆனால் இப்படிப்பட்ட முட்டாள்களுக்கு உலகத்தில் பஞ்சமே இல்லை– என்கிறார் அவர்.

அதனால் வழிபாடு, பிரார்த்தனை எல்லாவற்றையும் விழிப்புணர்வுடன் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்..

நம்ம ஆள் ஒருவன் காலில் முள் தைத்துவிட்டது என்று அதை இன்னொருமுள்ளால் எடுத்துக்கொண்டிருந்தான்.

கடைசியாக அப்பாடா... எடுத்து விட்டேன் என்று சொல்லிவிட்டு மறுபடியும் முள்ளெடுக்க ஆரம்பித்தான்.

"என்னப்பா இது.... முள்ளைத்தான் எடுத்துவிட்டயே... பின்னர் எதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அவன் ஏற்கனவே தைத்திருந்த முள்ளை எடுத்து விட்டேன். அதை எடுப்பதற்காக உபயோகப்படுத்திய முள் இப்பொழுது உள்ளே மாட்டிக்கொண்டது.

அதனால் மறுபடியும் முதலிருந்து ஆரம்பிக்கிறேன் என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு கிராம சேவையாளர் பதவி வழங்க முடிவு

## பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தகவல்

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நேர் முகப்பரீட்சைகளில் தோற்றாததால் வெற்றிடங்களை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இரண்டு ஆயிரத்து 600 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இந்த நேர் முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டதாக அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸ நாயக்க குறிப்பிட்டார்.

எனினும் நேர்முகத் தேர்வுக்காக அழைக்கப்பட்டவர்களில் 400 பேர் வரை சமூகம் அளிக்க வில்லை என அவர் கூறினார். இவர்கள் வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளமையே அதற்கு கார ணம் எனவும் அவர் கூறினார்.

இதற்கமைய தற்போது நிலவும் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்குபொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக சமுர்த்தி உத்தி யோகத்தர்களில் தகுதியுடையவர்களைத் தெரிவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சின் செயலாளர் நாடளாவிய ரீதியில் சுமார் 700 கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் குறிப்பிட்டார். (5-4)

### யாழ்.மாவட்ட விவசாயிகள் சிறுதானியச் செய்கையில் ஆர்வம்

யாழ். மாவட்டத்தில் அண்மையில் பெய்த மழையினால் நிலங்களில் ஈரலிப்புத் தன்மை காணப்படுவதையடுத்து காரைநகர், அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, நவாலி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் தமது வயல் நிலங்களில் சிறு தானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ-134)

### செயற்குழுக்கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய்பிரிவின் செயற்குழுக்கூட்டம் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப.3மணிக்கு பிரிவு அலு வலகத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-134)

### இராசி பலன்

23.03.2009
(பங்குனி 10, திங்கட்கிழமை)
தூவதசிமுன்னிரவு 8.51மணிவரை
அவிட்டம் பின்னிரவு 3.34மணிவரை
இராகுகாலம் 7.46 -9.16 மணிவரை
சுபநேரம்12.16-1-46மணிவரை
இரண்டாவது பங்குனித்திங்கள்

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, ஆரோக்கியம், மனமகிழ்ச்சி. |
| இடபம் | சுபநிகழ்வு கடின உழைப்பு , தூரதேசச் செய்தி, நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | அச்சமான நிலை, ஆரோக்கியக்குறைவு, புதிய திட்டமிடல், திடீர் பயணம். |
| கடகம் | வீண் பகை, காரிய தடங்கல், போசன சுகம், எதிர்பாராத நன்மை. |
| சிங்கம் | அபூர்வ சந்திப்பு, பணவருவாய், பிரயாண சுகம், காரிய அனுகூலம். |
| கன்னி | தேகாரோக்கியம், பகைவர் நேசம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும். |
| துலாம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, பெரியோர் உதவி, வியாபார விருத்தி. |
| விருச்சிகம் | மனச் சஞ்சலம், சுப செலவு, புதிய தகவல், முயற்சி தாமதம். |
| தனுசு | சகோதரர் உதவி, இனிய சம்பவம், தொழில்விருத்தி, நல்ல வருமானம் |
| மகரம் | சிந்தனைமிகுதி, கடினவார்த்தை, செய்தொழில் நன்மை, தன விரயம் |
| கும்பம் | ஆழ்ந்த சிந்தனை, பெரியோர் சந்திப்பு , போசனசுகம், பிரயாணம் |
| மீனம் | கோபப்படுதல், வேலைச் சுமை, பிரயாணம், முயற்சி தாமதம். |

வளவன்




### மின்சாரம் ஒழுங்கான முறையில் எப்போது தரப்படும்?

*பிரதம ஆசிரியர்,*
*வலம்புரி.*

தற்சமயம் யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தடைப்படும் நேரமானது மிகவும் அதிகரித்து காணப்படுகின்றது .இன்னும் நான்கு மாதங்களே உள்ள நிலையில் தம்முடைய A/L, புலமைப்பரிசில் பரீட்சைகளிற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்களின் கல்விக்கு இந்த மின்சாரமானது பெரும் சவாலாக அமைந்துள்ளது.

முன்னர் ஒழுங்காகத் தரப்பட்ட மின்சாரத்திற்கு இப்போது என்ன நடந்தது?

மின்சார சபை ஊழியரிடம் தொலைபேசியில் எப்போது மின்சாரம் வருமென்று கேட்டால் அவர்கள் கூறும் பதில் எங்களுக்குத் தெரியாது. இதெல்லாம் சுன்னாகத்தில் உள்ள மின்சார சபையிடம் தான் கேட்கவேண்டுமென்று அலட்சியமாகப் பதில் கூறுகின்றார்கள்.

எனவே இம் மின்சாரத் தடையை ஒரு மணித்தியாலமாக குறைத்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாணவர்களின் கல்வி சீரழியாத வகையில் இம் மின்சாரத்தினைத் தந்து எதிர்கால சந்ததியை நல்ல முறையில் கட்டியெழுப்ப உறுதுணை புரிவீர்கள் என நம்புகின்றேன். இனியாவது மின்சாரம் ஒழுங்கான முறையில் தரப்படும் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்,

*புலமைப் பரிசில், A/L மாணவர்கள் சார்பாக*
*ஒரு மாணவி*

### சங்குவேலி மயானம் திருத்தப்படுமா?

*ஆசிரியர்,*
*வலம்புரி.*

எமது சங்குவேலி கிராமத்தின் தம்மளை சங்கம் புலவு மயானம் பல வருடங்களாக முட்கள், பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றது.

அத்துடன் மக்கள் இளைப்பாறும் மடமும், சுற்று மதிலும், இறந்தவர்களை எரிக்ககொட்டகையும் இதுவரை காலமும் அமைக்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இனியாவது இக் கிராம மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு வலி தெற்கு பிரதேச செயலரும் பிரதேச சபைச் செயலாளரும் சங்கம்புலவு மயானத்தை புனரமைத்துத்தர முன்வருவார்கள் என நம்புகின்றோம்.

*நலன் விரும்பி*

### குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 45 |
| உருளைக்கிழங்கு | 55 | 65 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 45 | 60 |
| அவரை | - | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 15 | 20 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 25 | 35 |
| வாழைக்காய் | 75 | 80 |
| சின்ன வெங்காயம் | 25-30 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 35 | 50-60 |
| பாகற்காய் | 70 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 |
| பயிற்றங்காய் | 50 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 |
| போஞ்சி | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 15 | 30 |
| தேசிக்காய் | 120 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 30-35 |

# போக்குவரத்து விதிமுறைகளை நடைமுறைப்படுத்த ஒத்துழையுங்கள்

## யாழ்ப்பாணப் பொலிஸார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை அமுல்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு கேட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ்.நகரில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது.

அதில் யாழ்.நகரில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை நடைமுறைப்படுத்தி, மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சகல பிரதேச பொலிஸ் நிலையங்களுக்கும் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதிப் போக்குவரத்துக்கள் அதிகரிப்பதனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் வாகனக் காப்புறுதி, வரி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள் தலைக்கவசம் அணிய வேண்டுமென வீதிச் சோதனைச் சாவடிகளில் ஈடுபடும் பொலிஸார் வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.


மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5)

## ஆலோசனை சபையின் மாதாந்த கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை காலை 9 மணிக்கு சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வட்டார அங்கத்தவர்களை தவறாது பங்குபற்றுமாறு ஆலோசனைச் சபைத் தலைவரும் நகர சபைச் செயலாளருமான திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (5-29)




## யாழ்.செய்திகள்

# இளவாலை வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கப்படும்

## யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளவாலை வைத்தியசாலை அமைப்பதற்காக தனியார் ஒருவரால் 5 பரப்புக் காணி ஒன்று நன்கொடையாக யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது.

இக் காணியில் புதிய வைத்தியசாலைக் கட்டடம் அமைப்பதற்கு இவ்வாண்டு யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு வடக்கு மாகாண சபையால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது திட்டமிடல் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் கட்டடப் பணிகள் ஆரம்பமாகும் என யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மேலும் குறிப்பிட்டார். (5)

# யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு மூலதனச் செலவுகளுக்காக 59.5 மி. ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு 2009 ஆம் ஆண்டு மூலதனச் செலவினங்களுக்காக 59. 5 மில்லியன் ரூபாய் நிதியை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.


இந் நிதியிலிருந்து யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச வைத்தியசாலைகளின் கட்டட நிர்மாணப் பணிகள், திருத்த வேலைகள் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சங்கானை ஆயுள்வேத மூலிகைத் தோட்டம், அச்சுவேலி ஆயுள் வேத மருத்துவ நிலையம் ஆகியன அடுத்த மாதம் திறந்துவைக்கப்படுமெனவும் குறிப்பிட்ட யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயுள் வேத வைத்திய நிலையமொன்று அடுத்தமாத முற்பகுதியில் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (5)









யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிரேஷ்ட மாணவத் தலைவன் எல்.லவன் சத்தியப்பிரமாணம் எடுப்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் உபதலைவர் எம்.என்.அசோகன், கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா ஆகியோர் நிற்பதையும், திருமதி டாக்டர் ஸ்ரீதேவி அசோகன் மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதையும், அருகில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் ச.நிமலன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# ஏ-9 வீதியூடாக விரைவில் பொருட்கள் எடுத்து வரப்படும்

## யாழ்.நகர படையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கண்டி ஏ-9 வீதியூடாக பொருட்கள் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக யாழ்.நகர வர்த்தகர்களிடம் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் 512 ஆவது படையணியினருக்கும் யாழ்.நகர வர்த்தகர்களுக்கும் இடையிலான விஷேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதன்போதே படையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பொருட்களின் விலை பல்மடங்கு அதிகரித்துக் காணப்படுவதாகவும் விரைவில் ஏ-9 வீதியூடாக பொருட்கள் எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் விலைகள் குறைவடையுமென யாழ்.நகர படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கப்பம் கேட்போர் தொடர்பில் உடனடியாக தமக்கு தகவல் வழங்குமாறு தெரிவித்த படையினர் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் வர்த்தகர்களிடம் கேட்டனர்.

இதன்போது ஊடரங்குச் சட்ட நேரத்திலேயே திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (5)

## சட்டமாணி பரீட்சைகள் யாழில் நடைபெறும்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் சட்டமாணி (LLB) கற்கை நெறிக்கான மட்டம் III,IV,V (நிலைகள்) மாணவர்களுக்குரிய இறுதிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (5-30)

## வடமராட்சி கல்வி வலய அபிவிருத்திப் பிரிவின் அறிவிப்பு

(அல்வாய்)

தரம் 8,10 ஆகிய வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஆக்கத்திறன் வளர்ப்பு தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர் விபரங்களை வடமராட்சி கல்வி அபிவிருத்தி பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்மொழி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் அறிவித்துள்ளார். (5-19)

## தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில்

# வருமானம் குறைந்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பசுப்பால் வழங்கும் திட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 2 வயதுக்கும், 5 வயதுக்குமிடைப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பசுப்பால் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான பசுப்பால் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தினரால் சேகரித்து வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் சுமார் 2ஆயிரத்து 400 குழந்தைகள் நன்மையடையவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத்திட்டத்தின் பிரகாரம் சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்திற்கு 400 லீற்றர் பசுப்பால் தேவைப்படுவதாக குறிப்பிட்டுள்ள சங்கத் தலைவர் பசுப்பால் உற்பத்தியாளர்கள் தம்மால் வழங்கப்படக் கூடிய பாலின் அளவை பதிவுசெய்யுமாறு கேட்டுள்ளார். (5-29)

## பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கைநெறி பதிவுகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு 2009/2010 கல்வியாண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான புதிய பதிவுகளும், மீள் பதிவுகளும் நாளையும் நாளை மறுதினமும் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் இடம்பெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (5-30)

# இலங்கையில் தமிழர் 102

## ஹெளவரும் தமிழரும்
### உறுதிபெற்ற இனக்குழுக்கள்
### 900–1070

### இரண்டாம் பராந்தகன் படையெடுப்பு

பராந்தக சோழன் வடஎல்லையில் கவனஞ் செலுத்தியபோது சிங்களரும் பாண்டியரும் மீண்டும் ஒன்று கூடிச் சோழருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் விளைவாகப் பாண்டி நாடு சோழர் பிடியிலிருந்து விலகியது. பராந்தக சோழன் இறந்த பின் பதவிபெற்ற இரண்டாம் சுந்தர சோழ பராந்தகன் பாண்டி நாட்டைத் திருப்பிக் கைப்பற்றி அப்பால் இலங்கையையும் கைப்பற்ற முயற்சி எடுத்தான்.

இலங்கைப் படையெடுப்புக்குப் பொறுப்பாகச் சிறிய வேளார் என்ற சோழத் தளபதி நியமிக்கப்பட்டான். இவன் தன் படையுடன் சோழர் அதிகாரம் பெற்றிருந்த வட பகுதியில் ஊர்காவற்றுறையை வந்தடைந்து அங்கிருந்து அனுராதபுரத்தை நோக்கிப் படையுடன் சென்றான். அனுராதபுர அரசில் ஏற்பட்ட போரில் சோழர் தளபதி உயிரிழந்ததன் விளைவாகச் சோழர் படை அனுராதபுரத்தைக் கைப்பற்றத் தவறியது.

மேற்கூறிய இரு கட்டங்களிலும் நடைபெற்ற சோழர் படையெடுப்புக்களின் விளைவாக வடபகுதி வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக் கொள்ள இடமுண்டு. ஏற்கனவே, பல்லவர் தமிழ்நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தபோது, இப் பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருத்தல் கூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சோழர் படைகள் வட பகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தக சோழன் காலத்தில் இப் பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது.

முதலாம் பராந்தக சோழன் காலத்திலேயே சோழர், பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தனரா என்று தெரியவில்லை. அவர்கள் அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும். சோழருடைய மிகப் பழைய கல்வெட்டுக்கள் பொலநறுவையில் அல்லது பதவியாவிலே தான் கிடைத்துள்ளன.

சோழர் கல்வெட்டுக்களின் மூலம் இலங்கையில் சைவக் கோயில்களுக்குச் சோழ மன்னர் பெயர்களைக் கொடுத்திருப்பது சோழர் ஆட்சி பற்றி மறைமுகமான சில செய்திகளைத் தருகின்றது. சோழப் பெரு மன்னர்களுள் மூவருடைய பெயர்கள் இலங்கையிலிருந்து கோயில்களுக்கு இடப்பட்டதை இதுவரை கிடைத்த கல்வெட்டுக்கள் கூறு கின்றன. அம் மன்னர்கள் உத்தமசோழன், ராஜராஜ சோழன் மற்றும் ராஜேந்திரசோழன் ஆவர்.

உத்தமசோழன் பெயரைக் கொண்ட உத்தமசோழ ஈஸ்வரம் உத்தம சோழன் காலத்தில் (955-985) அப் பெயரைப் பெற்றிருந்தது என்று கொள்வதே மிகவும் பொருத்தமான கருத்து. அப்படி ஒரு பெயர் இடப்பட்டதற்கு உத்தமசோழன் ஆட்சி கோயில் அமைந்த இடத்தில் நிலவியமை காரணம் எனலாம். இவ்வாறு நோக்குமிடத்து பத்தாம் நூற்றாண்டில் முதலாம் பராந்தக சோழன் காலந்தொட்டு, இலங்கையின் வடகிழக்கில் சோழர் ஆட்சி நிறுவப்பட்டிருந்தது என்றும், இதனாலேதான் பராந்தகன் " மதுரையும் ஈழமும் கொண்ட " என்ற விருதைப் பெற்றிருந்தான் என்றும் கொள்ள வேண்டியுள்ளது.

### ராஜராஜன் படையெடுப்பு

இலங்கையைக் கைப்பற்றிய வரலாற்றில் அடுத்த கட்டம் ராஜராஜன் காலத்தில் இடம்பெறுகிறது. உத்தம சோழனுக்குப் பின் 985 இல் பதவியேற்ற ராஜராஜன் 992 அளவில் அனுராதபுரத்துதைத் தாக்கி அங்கு ஆட்சி நடத்திய சிங்கள மன்னன் படைகளை வெற்றிகொண்டான். இத்தத் தாக்குதலுக்கு முன்பே அனுராதபுரம் குழப்பமான அரசியல் நிலையில் இருந்தது.

பத்தாம் நூற்றாண்டின் இறுதிக்காலில் பல வம்சப் பூசல்களும் படையினர் கலகங்களும் சிங்கள அரசின் வலிமையைப் பெரிதும் குறைத்திருந்தன. இந்நிலையில் 972 இல் பதவி பெற்ற ஐந்தாவது ஸேன மன்னன் தனது படைத் தலைவனுக்கு அஞ்சி தெற்கிலிருந்த ரோஹண அரசுக்கு ஓடி ஒளிந்தான். அவனுடைய சேவையிலிருந்த தமிழ்ப் படைகளும் குழப்பம் விளைவித்தன. இவற்றை அடக்கக் கூடிய நிலையில் அவன் இருக்கவில்லை. அவன் இறந்த போது புதிய மன்னனாக 5ஆவது மஹிந்த பதவியேற்றான். வலியற்றவனாகவும் நிர்வாக அனுபவமற்றவனாகவும் காணப்பட்ட இம் மன்னன் மேலும் பல குழப்பங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை உருவாகியது. படையினர் நடத்திய கலகங்கள் மட்டுமின்றி விவசாயிகள் வரி செலுத்த மறுத்தமை மன்னனுக்கு ஆபத்தை உண்டு பண்ண , அவனும் தனக்கு முன் ஆண்டவர்கள் செய்தது போன்று, ரோஹணத்துக்கு ஓடி அபயம் பெற்றான். அனுராதபுரத்தில் கேரளப் படைகளும் சிங்களப் படைகளும் அதிகாரம் செலுத்தின. இது பாளி வரலாற்று நூலின் கூற்றாகும்.

மஹிந்த மன்னன் அனுராதபுரத்தைக் கைவிட்டு ஓடியது 992 இல் ஆகும். அக் கட்டத்திலேதான் கேரளத்தையும் பாண்டி நாட்டையும் முழுமையாக அடக்கித் தன் கவனத்தை இலங்கை மீது ராஜராஜசோழன் செலுத்தினான். எதிர்ப்புக் கொடுப்பதற்கு மன்னனோ படைகளே இல்லாத நிலையில் இலகுவில் அனுராதபுரம் கைப்பற்றப்பட்டது. இதனை ஒரு முக்கிய சாதனையாக ராஜராஜனும் அவனது மெய்க்கீர்த்தியைப் பாடியோரும் கருதினர். ராஜராஜன் வெற்றிகொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டபோது " எண்டிசை புகழ்தர ஈழமண்டலம் " கைப்புற்றப்பட்டதாகக் கல்வெட்டுக்களில் அறிவிக்கப்பட்டது. திருவாலங்காட்டுச் செப்பேட்டில் ராஜராஜன் புகழை சமஸ்கிருதத்தில் பாடிய புலவர் பின்வருமாறு அவன் வெற்றியை எடுத்துரைத்துள்ளார்.

''வலிமை வாய்ந்த வானரக் குழுவின் துணைகொண்டு அவை கடலில் அணை கட்டி இலங்கைக்கோனை(இராவணனை) கூரிய அம்பாற் கொன்றொழித்தான். இராகவர் கோமான்(இராமன்) அருமொழி வர்மனின் (ராஜராஜனின்) பொல்லாப் போர்த்தலைவன் கப்பல் கொண்டு கடல் கடந்து இலங்கைக் கோனை எரித்தொழித்தான். இராமனை விஞ்சியவன் இவனேதான். (தொடரும்)

பேராசிரியர்
கா. இந்திரபாலா

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 22



சிறு வயதில் ஒபாமா

பச்சையும் மண்ணிறமும் கலந்த நிலப் பரப்பு. கிராமங்கள் மறைந்து காடுகளின் காட்சி கட்புலனுக்கு விருந்தாகிறது. டீசல் எண்ணெயின் மணமும் காட்டுமரங்களின் மணமும் கலந்து வீசுகின்றன. ஆண்களும் பெண்களும் நெல் வயலூடே நாராய்கள் போன்று அடிமேல் அடி வைத்து நடை பயில்கின்றனர்.

அவர்களின் முகங்களை அவர்கள் அணிந்துள்ள வைக்கோல் தொப்பிகள் மறைக்கின்றன.

பேசாத வாயையுடைய நீர் எருமைகள் மேல் சிறுவன் ஒருவன் நனைந்து நீர் வடிய ஏட்டார் என்ற விலங்கு போன்று காட்சி தருகின்றான்.

தெருக்களில் சன நெரிசல், வண்டிகளில் கல்லையும், காட்டு மரங்களையும் ஏற்றித் தள்ளிக்கொண்டு போகும் மனிதர்கள். அதைத் தாண்டி பெரிய கட்டடங்கள். அப்போது ஒபாமாவின் தாயார் என்னவோ சொன்னார் "அரசாங்கம்... சுகர்ணோ" என்று. பின் சீற்றில் இருந்தவாறே யார் சுகர்ணோ என்று கேள்விக்கணையைத் தொடுத்தார் ஒபாமா. கேளாதவர் போன்று முன்னுக்குச் சுட்டி அங்கே பார் என்று கூறினார் தாயார்.

வீதியின் குறுக்கே கடந்து நின்றவாறு பத்து மாடிக் கட்டடத்திற்கு வானளாவ உயர்ந்து நின்ற பூதாகரமான உருவத்தைக் கண்டார் ஒபாமா.

அதன் உடல் மனிதன் போலும் முகம் குரங்கு போலும் காட்சியளித்தது. அந்தச் சிலையை சுற்றி கார் வலம் வரும் போது லோலோ "அதுதான் ஹனுமான்", "குரங்குக் கடவுள் ! என்று கூறினார். ஒபாமா அந்த உருவத்தில் தன்னைப் பறிகொடுத்த வராய் மௌனமாகி விட்டார்.

லோலோ தொடர்ந்தார் "ஹனுமான் ஒரு பெரிய வீரன். நூறு வீரர்களின் பலம் அவருடையது. அரக்கர்களோடு யுத்தம் செய்யும் போதெல்லாம் அவர் தோல்வியடைவதில்லை" என்றார்.


### ஜம்பொன்

புறநகர்ப் பகுதியில் வீடு அமைந்து இருந்தது. இன்னும் அபிவிருத்திகள் நடந்து கொண்டிருந்தன. மண்ணிறமாக ஓடும் ஆறு. அதை இணைத்து நின்ற பாலத்தின் மேல் வீதி.

அதன் மேல் கார் ஓடிக் கொண்டிருந்தது. கீழே செங்குத்தான நதிக்கரைகளில் கிராமத்து மக்கள் தங்கள் ஆடைகளைத் துவைத்துக் குளித்துக் கொண்டிருந்தனர்.

வீதி தார் போட்ட பகுதிகளிலிருந்து சல்லிக் கல்லு றோட்டுக்குள் புகுந்த கார் பின்பு சிறிய மளிகைக் கடைகளையும் வெள்ளையடித்த பங்களாக்களையும் ஒரு சுற்றுச் சுற்றி அப்பால் சென்று அசுத்தமான பகுதியை அடைந்தது.

அதிலிருந்து கிளம்பி ஒடுங்கிய காலடிப் பாதையால் மாறி மெல்ல மெல்ல மெலிந்த ஒரு கிராமத்தை அடைந்தது.



தாயார் மற்றும் லோலோவுடன் ஒபாமா

வீடு அவ்வளவு பெரிதாகவிருக்கவில்லை. வெளிப்பக்கம் பிளாஸ்ரர் போடப்பட்டிருந்தது. சிவந்த ஓடுகள் பதித்துள்ளனர். நன்றாகக் காற்றோட்டமுடைய வீடு. வீட்டுக்கு முன் பெரிய மாமரம் ஒன்று.

கார் கேற்றுக்குள் நுழையும்போது ஒபாமாவுக்கு ஒரு ஆச்சரியம் காத்து இருக்கிறதாக லோலோ கூறினார்.

அவர் கூறி முடிக்க முன் மரத்தின் மேலிருந்து காது செவிடுபடும் படி ஊளையிடும் சத்தம் கேட்டது.

தாயும் மகனும் திடுக்கிட்டுத் திரும்பினர். அங்கு பெரிய உரோமம் நிறைந்த உடல்களோடும் சிறிய தட்டையான முகத்தோடும் பீதி தரும் தன் கைகளோடும் திடீர் எனக் கீழே இருந்த ஒரு கிளையில் ஏதோ ஒன்று விழுந்த சத்தம் கேட்டது.

ஒபாமா "அதோ! ஒரு குரங்கு" என்று கத்தினார். தாயார் குறுக்கிட்டு அதைத் திருத்தினார். ''அது ஒரு வாலில்லாத மனிதக் குரங்கு'' ஒரங்குட்டான், சிம்பன்சி போன்று இதுவும் ஒரு இனம் தான் என்றார்.

(தொடரும்)

# இலங்கையில் தமிழர் கொலை நீடித்தால்

# இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்படும்

## வைகோ ஆவேசப் பேச்சு

(சென்னை)

இலங்கையில் தமிழர் கொலை நீடித்தால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்படும் என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

நாஞ்சில் சம்பத், இயக்குநர் சீமான், கொளத்தூர் மணி ஆகியோரை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் அடைத்ததைக் கண்டித்து வட சென்னை மாவட்ட மதிமுக சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு வைகோ பேசியதாவது,

அறிவிக்கப்படாத ஒரு அவசர நிலை தமிழகத்தில் தற்போது உள்ளது. உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் மீதான தடியடி சம்பவத்துக்கு யார் காரணம் என்பதை விளக்க வேண்டும்.

திமுக கட்சியை உடைக்கச் சதி செய்த சகுனி என்று என்னை கருணாநிதி கூறுகிறார். அவர் தான் எல்லாக் கட்சிகளையும் உடைத்தவர்.

இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்படும் நிலைப்பாடு மதிமுகவுக்கு கிடையாது இந்திய இறையாண்மைக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்று தான் கூறிவருகிறோம்.

இலங்கையில் தொடர்ந்து தமிழர்கள் கொலை செய்யப்படுவது நீடித்தால் இந்திய



நாஞ்சில் சம்பத்,சீமான், கொளத்தூர்மணி ஆகியோரை விடுதலை செய்யக்கோரி மதிமுக சார்பில் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வைகோ உரையாற்றுவதையும், அருகில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், துணைச்செயலர் சி.மகேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்படும் அப்படி ஒரு சூழலில் டில்லியில் உள்ள இல்லங்கள், தமிழகத்தின் தூதரகங்களாக மாறும் என்றார்.

இந்திய கம்யூனிஸ் கட்சி மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் உரையாற்றும் போது,

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஹிலாரி கிளிண்டன், ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் பான்-கி-மூன் உள்ளிட்டவர்கள்போரை நிறுத்தும்படி இலங்கையிடம் தெரிவித்தனர்.

ஆனால், உலகமே சொல்லும் போது நிராகரித்துவிட்டது இலங்கை அரசு.

இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்று கூறியது வைகோவோ, கருணாநிதியோ, நானோ கிடையாது. இதைக் கூறியவர் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி. குண்டு போட்டு பொது மக்களை ,குழந்தைகளை கொல்வதை தடுத்து நிறுத்த வேண்டும்.

தேசிய பாது காப்புச் சட்டத் தின் நோக்கம் என்ன என்று கூற வேண் டும். இலங்கையில் நாள்தோ றும் 300 பேர் வீதம்இனப்படுகொலை செய்யப் படுகின்றனர். இதைக் கண்டித்து பேசிய நாஞ்சில் சம்பத், கொளத் தூர் மணி, சீமான் ஆகி யோர் மீது தேசிய பாது காப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசத்தைப் பாதுகாப்பது குறிக்கோள் என்றால் தேசபக்தி என்ற பெயரில் மிக மட்டமான செயலில் ஈடுபடக்கூடாது. முதலில் எங்களை கைது செய்யுங்கள் கைதான மூன்று பேரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும். ஜனநாயக முறைப்படிதேர்தல் நடக்கும் நேரத்தில் கைதுசெய்திருக்கக் கூடாது என்றார்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் உரையாற்றுகையில்,

ஈழத் தமிழருக்கு ஆதரவாகப் போராட்டங்களை செய்யக் கூறியது நாங்கள் தான் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத் தலைவர்கள் மீது தேசியப் பாதுகாப்பு சட்டத்தைப் போடுங்கள். அந்த தைரியம் உங்களது ஆட்சிக்கு இருக்கிறதா என்று பாருங்கள்.

நாடாளுமன்றத் தேர்தலுக்காக இலங்கைத் தமிழர் பிரச்சினை திசை திரும்பவில்லை. தேர்தலில் இதை ஒரு கருவியாக உபயோகிக்க வேண்டும். காங்கிரஸ் திமுக கூட்டணியை முறியடிப்பது தலையாய கடமையாகும். என்றார். (6)

## ஈழத்தமிழர்களின் நலனுக்காக சிறுத்தைகள் இடம்பெற்றுள்ள அணிக்கு பா.ம.க. வரவேண்டும்

### திருமாவளவன் அழைப்பு



(சென்னை)

நாங்கள் இடம்பெற்றுள்ள அணிக்குவரவேண்டும் என பா.ம.கவுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர்தொல். திருமாவளன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வரும் மக்களவைத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகளும் பா.ம.கவும் ஒரே அணியில் இடம்பெற வேண்டும் என்று இரு கட்சிகளின் முன்னணித் தலைவர்களும், தொண்டர்களும் விரும்புகிறார்கள்.

கடந்த 20 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் மாநிலப் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் இந்தக் கருத்துஎதிரொலித்தது.

பாமகவும் விடுதலைச் சிறுத்தைகளும் எந்த அணியில் இருந்தாலும் விடுதலைச் சிறுத்தைகளுக்கு குறிப்பிடும் படியான பலன் கிடைக்கப் போவதில்லை. போதிய அளவில் அல்லது தகுதிக்கேற்ற வகையில் எந்தக் கூட்டணியிலும் எங்களுக்கு தொகுதிகள் கிடைக்கப் போவதில்லை.

ஆனால் நாங்கள் அரசியல் ஆதாயம் பார்க்காமல் சமூக நல்லிணக்கத்தையும் மொழி இனப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் பா.ம.கவை அழைக்கின்றோம்.

தேர்தலில் ஒரே அணியில் இருந்தால் இரு கட்சிகளும் ஈழத் தமிழர்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க முடியும்.

காங்கிரஸுடன் உறவை, கைவிடவில்லை என்பதைத் தவிர ஈழத் தமிழர்கள் விடயத்தில் தி.மு.க.வை குறைசொல்ல முடியாது காங்கிரஸுடன் உறவை எதிர்பார்த்து அது நடக்காததால் கடைசி நேரத்தில் உண்ணாவிரதத்தை நடத்தியது அ.தி.மு.க. எனவே ஈழத் தமிழர்களின் நலனுக்காக சிறுத்தைகள் இடம்பெற்றுள்ள அணிக்கு பா.ம.க. வரவேண்டும் என்று திருமாவளவன் அழைப்பு விடுத்துள்ளார். (6)

## இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு எதுவும் செய்யவில்லை

### மதுரை ஆதீனம் தெரிவிப்பு

(திருவாரூர்)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு எதுவும் செய்யவில்லை என்பதை தமிழக மக்கள் உணர்ந்துள்ளனர் என மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞான சம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

கச்சனம் அருள்மிகு வெள்வளை நாயகி உடனாய ஸ்ரீ கைச்சின்னேஸ்வரசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடுகளை கடந்த வியாழக்கிழமை பார்வையிட்ட பின்னர் அவர் அளித்த பேட்டியில்,

ஜனநாயக நாட்டில் பொதுத் தேர்தல் அவசியமானது. ஆனால் இடைத் தேர்தல் தேவையற்றது. ஏனெனில் அது அரசியல் கட்சிகளிடையே காழ்ப்புணர்வைத் தூண்டுகிறது.

வழக்குரைஞர்கள், காவல் துறையினர் மோதல் துரதிர்ஷ்டவசமானது. தேர்தல் ஆணையத்தைப் போல காவல் துறையையும் தனி அதிகாரம் பெற்ற அமைப்பாக ஏற்படுத்த வேண்டும். இலங்கை இராணுவத்துக்கு ஆயுத உதவிகள் செய்வதை இந்தியா உடனே நிறுத்த வேண்டும். இலங்கைப் பிரச்சினைக்கு இந்தியாவால் மட்டுமே தீர்வுகாண முடியும்.

மத்திய மாநில அரசுகளின் செயற்பாடுகளை மக்கள் கவனித்து வருகின்றனர். வரும் மக்களவைத் தேர்தலில் தங்கள் வாக்குகள் மூலம் மக்கள் ஓர் மௌனப் புரட்சியை நடத்துவார்கள். (6)

பாரதச் செய்திகள்

## நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடக் கோரி சீமானிடம் ஆதரவாளர்கள் வலியுறுத்தல்

(சென்னை)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று சிறையில் உள்ள சீமானிடம் அவரது ஆதரவாளர்கள் சென்று வலியுறுத்தியுள்ளனர். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதாகியுள்ள இயக்குநர் சீமான் புதுச்சேரி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவரை கர்நாடகத் தமிழர்கள் பலர் குழுவாகச் சென்று சந்தித்தனர்.


சிறையிலும் தான் வழக்கமாக அணியும் சேகுவாரா டி சேட்டுடன்தான் சீமான் காட்சியளித்ததாக அவர்கள் தெரிவித்தனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று இச் சந்திப்பின் போது அவர்கள் சீமானிடம் வலியுறுத்தியதாகவும், உலகத் தமிழர்கள் தேர்தல் செலவைப் பார்த்துக் கொள்வார்கள் என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இயக்குநர் சீமான் அவர்களது கோரிக்கை குறித்து எந்தப் பதிலையும் அளிக்கவில்லை என்று தெரிகிறது.

இதற்கிடையே அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில்,தனது ஆதரவாளர்கள் விரும்பினால் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கத் தயாராக இருப்பதாக சீமான் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தனது நலன்விரும்பிகள் பிரசாரம் செய்யத் தயாராக இருந்தால் இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தை எதிர்த்து அவரது சிவகங்கை தொகுதியில் போட்டியிட விரும்புவதாகவும் அவர் அப் பேட்டியில் தெரிவித்திருந்தார். (6)

## ஈழத்தமிழர் துயர்நீங்க பத்துமலை கோவிலில் 272 படிகளில் முழங்காலால் ஏறி பிரார்த்தனை



(கோலாலம்பூர்)

இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் துயரங்கள் நீங்கி புது வாழ்வு பெற வேண்டும் என்ற வேண்டுதலுடன்மலேசிய இளைஞர் ஒருவர் அங்குள்ள பத்துமலை முருகன் கோவில் படிக்கட்டுகளில் தனது முழங்காலால் ஏறி பிரார்த்தனை மேற்கொண்டார்.

கோலாலம்பூர் செந்தூல் பகுதியைச் சேர்ந்த இளைஞர் சௌந்தரராஜாநாயுடு என்பவரே அண் மையில் பத்து மலையில் மேற்கண்ட சிறப்புப் பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

அப்போது பத்துமலைக் கோவிலில் உள்ள 272 படிகளையும் முழங்காலினாலேயே ஏறி இறங்கினார்.

இவருக்கு குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் துணைபுரிந்தனர்.


இலங்கைத் தமிழர்கள்வாழ்வில் நிம்மதி பிறக்க வேண்டி பத்துமலை முருகப் பெருமானிடம் பிரார்த்தனை செய்தேன்.

ஈழத் தமிழர்கள் தினம் தினம் செத்து மடிவது கொடுமையிலும் கொடுமை என்று அவர் துயரத்தோடு கூறினார். (6)

# வைத்தியகலாநிதி புண்ணியமூர்த்தி அவர்களின்

# சேவை நயப்பு விழா சிறப்பு மலர் 23.03.2009

## மகத்தான சேவைக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்



ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி தற்போது இடமாற்றம் பெற்றுச் செல்லும் அருணா புண்ணியமூர்த்தி (M.D) தனது சேவையினால் பிரதேச மக்கள், சக ஊழியர்கள் திணைக்களத் தலைவர் மற்றும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களின் மனங்களில் குறுகிய காலத்தில் தன்னை நிலை நிறுத்திய நற்பண்புகள் கொண்ட இளம் வைத்திய அதிகாரி அவர் காலத்தில் இம் மருத்துவமனை மாவட்ட நிலையிலிருந்து ஆதார வைத்திய சாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை மேலும் சிறப்பானது இவரது மருத்துவம் மருந்து மாத்திரைகளுடனாது மட்டுமன்றி அன்பானது, அரவணைப்பானது.

பலரது நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்ற இவர் இடமாற்றலாகிச் செல்வது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை பெரும் இழப்பு எனினும் அவர் சகல உயர்வுகளும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என்று நட்புரிமையுடன் வாழ்த்துகின்றேன்.

*க.ஸ்ரீமோகனன்*
*உதவி அரசாங்க அதிபர்*
*தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.*

## காலமறிந்து தந்த பணி ஞாலமுள்ளவரைக்கும் வாழ்க



இடைவெளி இல்லாத இளைப்பாறாத யுத்தத்தால் அலட்சிய சின்னங்களாய் மனித ஆன்மாக்கள் அஸ்தமித்துக் கொண்டிருந்த இக் கட்டான காலப் பகுதியில் எம் தீவுக்குக் கிடைத்த தங்கள் பணி உடலாலும், உள் ளத்தாலும் நொந்து வெந்து சோகப்பட்ட எம்மக்களின் சிந்தையைக் குளிர்வித்து தெம்பளிக்கும் ஒன்றாக அமைந்திருந்தது என்றால் அதை எவராலும் மறக்க முடியாது. பண்ணை தாண்டிய பயணமும், அல்லைப் பிட்டியின் அங்கப் பரிசோதனையும் அப் பகுயூடாகப் பணி செய்யப் பயணிப் போரை கிலி கொள்ளச்செய்த கால கட்டத்தில் எம் தீவைத்தேடி வந்து மருத்துவப் பணிசெய்த தங்களின் சீர்மைக் குணங்கண்டு உள்ளம் உவக்கின்றேன்.

இம்மருத்துவப் பணியைக் கருத்துடன் செய்து வந்த தாங்கள் அத்துறையில் மட்டுமன்றி சமூகப் பணிகளிலும் கிராமத்து வளர்ச்சியிலும் தீவிர நாட்டம் காட்டி வருவதையும் மாணவ சமுகத்தில் பாசமுள்ள தந்தையாகப் பவனி வருவதையும் எண்ணிப் பார்க்கையில்

யாதும் ஊரே யாவரும் கேளீர்.

என்ற மகுடவாக்கிற்கே மகுடமாக இருப்பதை எண்ணி என் உள்ளம் பேருவகை கொள்கின்றது.

சேவை நயந்து போற்றும் நன் நாளாம் இந் நாளில்
மண் செய் புண்ணியமோ மனிதர் செய்ததவப் பயனோ
கண்ணான உம் பணியால் கண்ணெகிழும் வேளைதனில்
சந்தோச வட்டத்துள் நானும் ஒருவனாய்
வந்தாசியளிப்பதில் உள்ளம் உவக்கின்றேன்
தேவையுள்ளோர் தேசமெல்லாம்
சேவைசெய்து நீர் உயர
வானவரை வேண்டி

இறையாசீரையும் தெரிவித்து நிற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

*அருட் தந்தை யோ.அ.ஜேசுதாஸ்*
*முன்னாள் அதிபர்*
*யா/ புனிதஅந்தோனியார் கல்லூரி,*
*ஊர்காவற்றுறை.*


## தன்னலம் கருதாத உத்தமபெருந்தகை



இடம்பெயர்வின் பின் பல நிலைகளிலும் பின்தங்கி இருந்தஎமது ஊர்காவற்றுறை வைத்தியசாலையைபுதிய மெருகூட்டி தன்னலம் கருதாதது எம் மக்களுக்காக மக்களோடுநின்று ஒரு வருடத்திற்கும்மேலாக அளப்பரிய சேவையாற்றியமை எமது வைத்திய அதிகாரிக்கு மட்டுமே உரித்தாகும். நோயுற்று,ஆறுதலற்று இவரை நாடி வந்த மக்கள் எவரும் திருப்தி அடையாமல் சென்றதில்லை. ஒரு வருடத்திற்கும் மேலானஇவரது சேவைக்காலத்தில் வைத்தியசாலையை மெருகூட்டி புதிய கட்டடங்கள் அமைத்து நவீன கருவிகளைத் தருவித்து ஊர் காவற்றுறை வைத்தியசாலையை புதுப் பொலிவுடன் மாற்றியுள்ளார். கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு இவற்றுடன் மனித நேயத்திற்கும் மதிப்பளித்ததை பல சந்தர்ப்பங்களில் நாம காணக் கூடியதாக இருந்துள்ளது.

சேவையின் சிகரமாக விளங்கும் திரு. அருணா புண்ணியமூர்த்தி அவர்கள் செல்லும் இடமெல்லாம் சிறப்புற அமையவும் அவரது அறிவும்,ஆற்றலும் எமது சமூகத்திற்கு தொடர்ந்து சென்றடையவும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*திரு தி. சுந்தரலிங்கம்*
*தலைவர்*
*ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.*



## வாழ்த்துப்பா!

அலை மோதும் நெய்தலும் கதிர் தொங்கும் மருதமும்
கலந்தாடும் காவலூரில் சுகத்துடன் சுகதேக
நலத்தினைத் தந்திடும் நிலையத்தின் அதிபதியாய்
அரும்பணி செய்த எம் வைத்தியத் தந்தையே
வாழ்க நீர் ! வாழ்க நீவீர் !

புண்ணிய மூர்த்தியென்னும் பொன்னிகர் நாமமுடன்
அன்பு சேர் அப்பனாக எண்ணமதில் குடியேறி
எமக்காக வாழ்ந்தவா இனிதாக வாழ்த்துகின்றோம்!
கடலலை கொஞ்சிடும் காவலூர் மண்ணிலே
தடம் வைத்து திடமாக நீர் உடலுள நோய்கட்கு
விடுதலை தந்திட்ட நெடுநகர் விடிவெள்ளியே !

புன்னகை சிந்து முகம் கண்ணிலே கருணை மனம்
உன்னரும் ஆயுதங்களாய் எண்ணமதில் கொண்டு நீர்
வண்ணமுயர் பணி செய்த அண்ணலே வாழி நீர்!
இனித்திடும் செந்தமிழும் துணிந்திடும் நெஞ்சுரமும்
கனிந்திடும் கம்பீரமும் அணியெனக் கொண்டெங்கும்
மனிதத்தைக் காண்பித்த புனிதனே வாழி நீவீர்!

போரெனும் சூரனால் ஊரெலாம் தீய்கையில்
ஒருவனாய் உறுதி தந்து நோய் நொடி துடைத்து நல்
வாழ் நெறி புகட்டிய அன்பரே வாழி நீவீர்!
செய்திட்ட சேவையை சீர் தூக்கி நோக்கிடும்
சேவை நயப்பு நாளில் சிந்தாமல் சிதறாமல்
மண் மீது உம்பணி மங்காது சுடர்ந்திடட்டும்!

ஆள் நிறைந்த தெருக்களெல்லாம் ஊரடங்கால்
உறங்கிப் போக
பேரிடியோ பெருமழையோ பேதலிக்கும் நடுநிசியோ
அரிக்கன் லாந்தருடன் அணி கோர்த்து வருவோர்க்கு
தூக்கம் விட்டெழுந்து துன்பம் துடைத்தெறிந்து
வெம்பிடும் எம்மவரின் வேதனையைப் போக்கி நின்ற
நம்பிக்கை நாயகனே! வாழ்க நீர் வளர்க நீவீர்!!

*காவலூர்*
*மக்கள்*

## ஊர்காவற்றுறை பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



ஊர்காவற்றுறை பிரதேசத்தில் அமைந்திருக்கும் அரசினர் வைத்திய சாலையில்பணியாற்றி வரும் வைத்திய கலாநிதி அருணாஅவர்கள் எமது பிரதேச மக்களுக்கு அரும் பணியாற்றி மாற்றலாகிச் செல்லும் இவ் வேளையில் ஆசி கூறுகிறேன். மிகக் குறுகிய காலமே எமது பிரதேசத்தில் பணியாற்றினாலும் ஆழமான அர்ப்பணிப்பு மிக்க பணியாகவே அது அமைந்திருக்கின்றது. அழகும் தூய்மையும் நிறைந்ததாக இவ் வைத்தியசாலை திகழ்கிறது என்றால் அதற்கு காரணம் எமது வைத்திய அதிகாரிதான். நோயாளர்கள் வருகின்ற போது வைத்தியர் அவர்களின் அணுகுமுறையும் உரையாடலும் பாதி நோயை நீக்கிவிடும். நோயாளர்களுடன் அன்பும் கரிசணையும் பணியாளர்களுடன் நல்லுறவும் வைத்திருக்கும் எளிமையான பண்புடையவர். நேரகாலம் பாராது தேவை கருதி உணர்வோடு செயல்படும் செயல் வீரர். இத்தருணத்தில் அவருடைய மகத்தான பணிக்காக நன்றி கூறுவது எமது கடமை. அவரதுபணி மேலும் சிறக்க வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

*அருட் பணி X.W.ஜேம்ஸ்*
*பங்குத்தந்தை ஊர்காவற்றுறை.*

## மனம் நிறைந்த வாழ்த்து



யாழ். ஊர்காவற்றுறை பிரதேச அரசினர்வைத்தியசாலையில் கடமையாற்றி தற்போது இடம் மாற்றலாகிச் செல்கிறார் வைத்திய அதிகாரி அருணா புண்ணியமூர்த்தி.

ஊர்காவற்றுறை பிரதேசம் பின் தங்கிய மிகவும் கஷ்டப்பட்ட மக்களே கூடுதலாக வாழகின்ற ஒரு கிராமமாகும். அப்படிப்பட்ட ஒரு கிராமத்தில் தனது தன்னலமற்ற சேவையினால் மக்கள் மனங்களில் நிறைந்துள்ளார். இவர் தன் கடமை நேரத்துக்கும் அப்பால் சென்று தன்னால் இயன்ற சகலவிதமான வைத் திய சேவைகளை அளவின்றி அள்ளி வழங்கியிருக் கின்றார். வைத்தியசாலைக்கு வருகின்ற அனைத்து நோயாளர்களையும் அன்புடனும் பரிவுடனும் அரவணைத்து சகலவிதமான வைத்திய ஆலோசனைகளையும் வழங்குவார். அவர் மென்மேலும் வைத்தியத்துறையில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல விஸ்வநாதப் பெருமானுடைய நல்லாசிகள் என்றும் உண்டு.

*இங்ஙனம்*
*சிவஸ்ரீ செல்வ விமலராஜக் குருக்கள்*
*காசி விசாலாட்சி சமேத விஸ்வநாதர் தேவஸ்தானம்*
*ஊர்காவற்றுறை.*

## பணி சிறக்க வாழ்த்துகின்றோம்!

கடலலையின் ஓசையுடன் இதமாகச் சுமந்து வரும் தென்றலைப் பெற்றுக் குளிர்ச்சியுடன் பொலிவாகத் திகழ்கின்றது ஊர்காவற்றுறை அரசினர் வைத்திய சாலை, இவ் வைத்திய சாலையிலேபணிபுரிந்து மாற்றலாகிச் செல்லும் வைத்திய அதிகாரி கலாநிதி புண்ணிமூர்த்தி அருணா அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்கின்றோம். அவரின் சேவை மனப்பான்மை, தியாகம்,தூய்மை, இலட்சியம் என்பன வைத்தியசாலையின் புதுப் பொலிவின்மூலம் தெரிகின்றது. இவரின் வரவிற்கு முன் இருந்த நிலையையும் தற்போதைய நிலையையும் பார்க்கும் போது அனைவரையும் வியக்க வைக்கும் அளவிற்கு இருக்கின்றது வைத்தியசாலை. இவர் எமது பகுதியில் குறுகிய காலம் பணிபுரிந்தாலும் இவரின் பணி மகத்தானது, பாராட்டுதலுக்குரியது. எவ்வளவு தொகையான மக்கள் வந்தாலும் அலுக்காமல் அவர்களை அன்புடன் அரவணைத்து, ஆலோசனை கூறுவதில் நல்லாசானகவும் திகழ்கின்றார். மொத்தத்தில் இவரின் பணிக்காலம்எமது பிரதேசத்திற்கு கிடைத்த கொடையே. இவர் செல்லும் இடத்திலும் இவர் பணி சிறக்க எமது கட்சியின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி*
*தீவகம்*
*ஊர்காவற்றுறை.*


கந்தையா அன்சன்ஸ்
வைஷ்ணமி புடவை அன் தையலகம்
அல்பிரேட் ஸ்ரோர்ஸ்
சிம்சன் தச்சுத் தொழிலகம்
சதீஸ் தேனீரகம்

பல.நோ.கூ.ச.ஊர்காவற்றுறை
கோர் நிறுவனம்
வசந்தா மருந்தகம்
பனை தெ.வ.அ.கூ.சங்கம்
டினோஷன் பல்பொருள் வாணிபம்
லாகுஷன் வெதுப்பகம்
Island Shotokan Kortodo Association

மாறன் புகைப்படக் கலையகம்
மதுச்சாலை ஊர்காவற்றுறை
ஜெறோமி வெதுப்பகம்
சிறி தேனீரகம்
அண்ணா சன சமூகநிலையம்

மேலைக் கரம்பன் மாதர் சங்கம்
விக்ரர் ரவல்ஸ்
அம்பாள் கட்டுமான நிறுவனம்
மரியசேகரன் ஒப்பந்தகாரர்
மகேந்திரன் காய்கறிச்சோலை
குணாலினி மரக்காலை

# ஆங்கில மொழிப் பயிற்சி தரும் இணையத்தளம்

ஆங்கில மொழியில் உங்களுக்கு எத்தனை சொற்கள் தெரியும்? அவற்றின் சரியான பொருள் உடனடியாகச் சொல்லமுடியுமா?

நீங்கள் மாணவரா? பெற்றோரா? ஆசிரியரா?மாணவராய் இல்லை என்றால் கற்கும் மாணவர்களுக்கு எப்படி உதவ முடியும் என்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் தருகிறது http:/www.verbalearn.com என்ற முகவரியில் உள்ள இணையத் தளம். ஆங்கில சொற்கள் குறித்த உங்கள் அறிவை வளர்க்கும் வகையில் பல சோதனைத் தேர் வுகளை இது நடத்துகிறது. உங்கள் பதில் சரியா, இல்லையா என்று சொல்லி விளக்கமும் அளிக்கிறது.

முதலில் இந்தத் தளம் சென்றவுடன் ஒரு விளக்க வீடியோ கிடைக்கிறது. அதனை முதலில் பார்த்தால் இந்தத் தளத்தை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று வழிகாட்டப்படுகிறது. ஸ்டடி லிஸ்ட் தயார் செய்திடலாம். அதனை எப்படி உங்கள் கணனிக்குத் தரையிறக்கம் Download செய்து பயன்படுத்தலாம் என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது.SAT ACT,GRE,General vocabulary "என்ற நான்கு பிரிவுகளில் சொற்களை வகைப்படுத்தி சிறு சிறு தேர்வுகளை நடத்தி நம் சொற்திறன் என்று காட்டுகிறது. SAT ACT GRE தேர்வுகளுக்கு தயார் செய்திடும் மாணவர்கள் இந்தத் தளம் சென்று தங்க ளின் நிலையை அறிந்துகொள்ள வேண் டியது மிகவும் அவசியம். மற்றவர்கள் General vocabulary என்ற பிரிவில் தங்களுக் குத் தெரிந்து சொற்கள் குறித்துத் தெரிந்து கொள்ளலாம். Start Now பட்டனில் கிளிக் செய்து நீங்கள் எந்தப் பிரிவில் தேர்வு எடுத்துக் கொள்ள விரும்புகிறீர்கள் என்று காட்டி அந்தத் தேர்வினை மேற்கொள்ளலாம்.

தளத்தில் உங்களைப் பதிவு செய்து விட் டால் உங்களின் சொல் திறன் எப்படி உள் ளது என்றும் நீங்கள் அமைத்துள்ள ஸ்டடி லிஸ்ட் என்ன வகையில் இன்னும் மேம்படுத் தப்படலாம் என்றும் காட்டப்படுகிறது. சிறுவர் களாய் இருந்து இந்தத் தளத்தைப் பயன்படுத்த முடியவில்லை என்றால் பெற்றோர்களும், ஆசிரியர்களும் அவர்களுக்கு உதவலாம்.

இதில் உள்ள இன்னொரு சிறப்பு சொற்களுக்கான ஓடியோ பைல். இதனைஇயக்கி நன்றாகப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்.உங்கள் ஸ்டடி லிஸ்டை கணனிக்கு மாற்றிய பின் அதனை ஐ-பாட் சாதனத்திற்கு மாற்றி நீங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் சொற்களை பயிற்சிசெய்து கொண்டு செல்லலாம்.பல வகைகளில் உங்கள் ஆங்கில அறிவை வளர்க்கும் இந்தத் தளம் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்குமான ஒரு தளமாகும். இந்த சேவை அனைத்தும் நமக்கு இலவசமாகக் கிடைக்கிறது என்பது இன்னொருசிறப்பு




# இன்னும் உங்கள் வலை மனையைக் கட்டவில்லையா?




வலைமனை, வலைப்பூ, இணைய வீடு என்றெல்லாம் அழைக்கப்படும் BLOG இப்போது இன்டர்நெட்டில் வேகமாக வளர்ந்து வரும் ஒரு கலாசாரமாக மாறிவிட்டது. ஒருவ ருக்கு ஒரு BLOG அறிமுகப்படுத்தினால் அதை அவர் ஒருநாளில் படித்து முடித்து விடுவார். எப்படி ஒரு BLOG அமைப்பது என்று கற்றுக்கொடுங்கள்.அவர் ஒன்லைன் மூலமாகச் சரித்திரத்தில் இடம்பெறுவார் என்று ஒரு பழ மொழி அமைக்கும் அளவிற்கு BLOG அமைக்கும் பழக்கம் பரவி வருகிறது. இமெயில் முகவரி இருப்பது போல ஒவ்வொருவரும் ஒரு BLOG அமைத்து அந்த முகவரியையும் தரத் தொடங்கியுள்ளனர்.


இன்டர்நெட் முகவரியினை விலைகொடுத்து வாங்கி ஒரு தளம் ஒன்றை எச்.டி.எம்.எல். இஞ்சினியர் உதவியுடன் உருவாக்கி பின் அதனை தாங்கிக் கொள்ள ஒரு சேர்வருக்குக் கட்டணம் செலுத்தி அல்லல்படுவதைக் காட்டிலும் இலவசமாக ஒரு BLOG அமைப்பது மிகவும் எளிதான செயலாகப் போய்விட்டது. இதற்கென பல தளங்கள் நமக்கு இலவசமாக இடமும் வசதிகளும் தந்தாலும் மூன்று தளங்கள் மக்களிடையே பிரபலமாகியுள்ளன.

(தொடரும்)

# ராக்கெட் அறிவியல் படிப்புகளைக் கற்பது எப்படி?

ஏரோநாடிக்ஸ் மற்றும் விண்வெளி அறிவியலை உள்ளடக் கிய அறிவியலின் புதிய துறை தான் றொக் கெட் சயின்ஸ். கடந்த சில ஆண்டுகளாகச் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுவரும் இத்துறை மாணவர்களுக்கான மற்றொரு கல்வி வாய்ப்பு பிரிவாக விளங்குகிறது. வளர்ந்த நாடுகளில் இத்துறையின் வளர்ச்சி அபரிமித மாக இருக்கிறது. இத்துறைக்கு அதிக முக்கியத்து வமும் ஏராளமான முதலீடும் தரப்பட்டு வருகிறது.

1903ஆம் ஆண்டில் தொடங்கிய அதிவேக வானூர்தி வளர்ச்சியானது இன்று பூமிக்கான செயற்கைக்கோள் நிறுவும் வளர்ச்சியாக பரிமாணம் பெற்றுள்ளது. அதிவேக விமானங்கள் இராணுவத்தில் பயன்படுத்துவது, ஆளில்லாத இராணுவ கண்காணிப்பு வானூர்தி, நிலவில் ஆய்வுக்கான கலங்கள், பிற கிரகங்களை ஆய்வு செய்வது எனப்பல்வேறு நோக்கங்களுடன் இத்துறை சிறகடித்துப் பறந்து விரிவடைந்துள்ளது. விண்கலங்கள், ஹெலிகொப்டர்கள்,ஆயுதங்களின் வடிவமைப்பு, உற்பத்திச் செயற்பாடு பற்றிப் ப்டிக்கும் பொறியியலின் ஒரு பிரிவாக ஏரோஸ்பேஸ் உள்ளது. ஏரோடைனமிக்ஸ் புரபல்ஷன்,எலெக்ட்ரானிக்ஸ் பிரிவுகளோடு இணைந்து ஏரோஸ்பேஸ் கூட்டாகச் செயல்படுகிறது ஏவியேஷன், விண்வெளி ஆய்வு, பாதுகாப்பு அமைப்புகளின் மாதிரி, வளர்ச்சி மற்றும் பராமரிப்பு பணிகள் இதில் மேற் கொள்ளப் படுகின்றன.



இத்துறை படிப்புகளை முடிப்பவருக்கு அரசு மற்றும் தனியார் விமான நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவ னங்களில் சிறப்பான பணி வாய்ப்புகள் கிடைக்கின்றன.

இதுதவிர ஆய்வு மாதிரிச் சோத னை, உற்பத்தி மற்றும் நிர்வாகப் பணிகளும் கிடைக்கின்றன. இந்தியாவின் ஐ.ஐ.டிக்கள் பஞ்சாப்பல்கலைக் கழகம், சென்னை அண்ணா பல்கலைக் கழகம் ஆகியவற்றில் இத்துறை தொடர்பான படிப்புகள் தரப்படுகின்றன. இவை நடத்தும் பி.டெக் படிப்பில் நுழைவுத்தேர்வு மூலமாக சேர வேண்டியுள்ளது. சோதனைக் கூடங்களின் தன்மையைப் பொறுத்து கல்வி நிறுவனங்கள் மதிப்பிடப்படுகின்றன. பி.இ. இன்ஜினியரிங் முடிப்பவர்கள் இத்துறையில் இணைந்தால் அவர்கள் துறையில் சிறப்பாக மிளிர முடிகிறது. பெங்களூரில் உள்ள ஐ.ஐ.எஸ்.சி. இத்துறையில் எம்.எஸ்.சி. எம்.டெக் படிப்புகளை நடத்துகிறது.

இது தவிர,பிற அயல் நாடுகளில் அரிஸோனா ஸ்டேட் பல்கலைக் கழகம், எம்க்லி–ரிடிவ் ஏரோநாடிக்ஸ் பல் கலைக்கழகம், மிக்ஸிகன் பல்கலைக்கழகம் , இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம், டெக்சாஸ் பல்கலைக்கழகம், ஏர்லிங்டன் போன்றவற் றிலும் இத்துறை தொடர்பான படிப்புகள் தரப்படுகின்றன. இத்துறையில் போக்குவரத்து விமானங்களைத் தயாரிப்பது, விண்கல உற்பத்தி,ஆளில்லாத விண்கலம் தயாரிப்பு, நாட்டின் பாதுகாப்பு பணிகளுக்கான விண்கலம், ஆயுதம் தயாரிப்பு, ஆய்வுப் பணிகள் என இத்துறை தொடர் வளர்ச்சி கண்டு வருவதால் துறைக்கான எதிர்காலம் சிறப்பாகவேஇருக்கிறது.

இத்துறையில் தனியார் அதிகமாக ஈடுபடு வதால் இத்துறையின் வளர்ச்சி உறுதியானது என்றே கூறலாம் இத்துறையின் திறன்களைப் பொறுத்து ஒருவரது சம்பளம் தீர்மானிக்கப்படுகிறது.

ஆர்.யூ.பாலமுருகன்

# பல இலட்சம் கணனிகளை செயலிழக்கச் செய்த வைரஸ்!

பல இலட்சம் கணனிகளை செயலிழக்கச் செய்து வரும் டவுண் ஆட் அப் வைரஸ் (வோர்ம்) மிக அருமையாக வடிவமைக்கப்பட்ட வைரஸ் எனப் பலரின் பாராட்டினைப் பெற்றுள்ளது. இந்த வைரஸைக் கண்டறிந்து அவற்றை நீக்கும் வல்லுநர்கள் இதன் அடுத்த தாக்குதலுக்காகக் காத்திருக்கின்றனர்.

இதைத் தயாரித்து உலவ விட்டவர்களின் நோக்கம் என்ன என்று கூட அறியாமல் சைமாண்டெக் கோர்ப்பரேஷன் நிறுவன



வைரஸ் எதிர்ப்பு ஆய்வாளர்கள் காத்திருக்கின்றனர். கொன்பிக்கர் (Conficker) என அழைக்கப்படும் இந்த மால்வெயார் புரோகிராமினைத் தயாரித்து அனுப்பியவர்கள்நிச்சயம் கத்துக்குட்டிகளாக இருக்கமாட்டார்கள்.

இதுபோன்ற வைரஸ் புரோகிராமினை எழுதுவதில் பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருப்பார்கள் என்பது நிச்சயம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதமே இது தலையைக் காட்டினாலும், டிசம்பர் மற்றும் ஜனவரியில் தான் தன் நாசவேலையை மிகத் தீவிரமாகக் காட்டத் தொடங்கியது.

சென்ற டிசம்பர் மாதம் வரையில் உலகில் இயங்கும் மொத்த கணனிகளில் 6 சதவீத கணனிகளை இது பாதித்துள்ளது. விண்டோஸ் இயக்கத் தொகுப்பில் இருந்த பலவீனமான புரோகிராம் பகுதியைப் பயன்படுத்தியும், பிளாஷ்டிரைவ் பயன்பாட்டினைப் பயன்படுத்தியும் இந்த வைரஸ் செயற்படுகிறது.


இதில்,மற்றுமொரு விடயம் என்னவென்றால் திருட்டுத்தனமாக நகலெடுத்துச் சொப்ட்வெயர் புரோகிராம்களை பயன்படுத்துபவர்களின் கணனிகளில் இது எளிதாகப் பரவுகிறது.அதனால், சொப்ட் வெயர் பைரசி அதிகம் உள்ள சீனாவில் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம், திருட்டுத்தனமாக விண்டோஸ் கொப்பி செய்து பயன்படுத்துபவர்கள், மைக்ரோ சொப்ட் தரும் பேட்ச் பைல்களைக் கொண்டு தங்கள் கணனிகளை அப்டேட் செய்திடமாட்டார்கள். சிக்கிக்கொள்வோம் என்ற அச்சத்தில் இவர்கள் அப்டேட் பைல்கள் பக்கம் செல்ல மாட்டார்கள். இதனால், ஒப்பரேட்டிங் சிஸ்டத் தில் உள்ள குறைகள் அப்படியே இருக்கும். அந்த வழிகள் மூலமாக இந்த வோர்ம் பரவுகிறது.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரை பேட்ச் பைல்களை இணைக்காத விண்டோஸ் 2000, எக்ஸ்பி, சேர்விஸ் 2003 ஆகிய ஒப்பரேட்டிங் சிஸ்டங்கள் இயங்கும் கணனிகளை இது எளிதாகப் பற்றிக்கொள்கிறது. இதைப் பாதுகாப்பது மிகவும் கஷ்டம். இந்த வைரஸ் மூன்று முனைகளில் உள்ள பலவீனத்தைப் பயன்படுத்தி தாக்குதல்களை நடத்துகிறது. எனவே முதலில் மைக்ரோ சொப்ட் ஒக்டோபரில் வெளியிட்ட ஃபேஜ் பைலை இணைக்க வேண்டும். விண்டோஸ் தானாக இயங்கி அப்டேட் செய்துகொள்ளும் படி வைத்திருப்பவர்களுக்கு இது குறித்து கவலைப்படத் தேவையில்லையென்றாலும் ஒரு முறை இதனை சோதித்து வைத்துக்கொள்வதில் தவறில்லை. விண்டோஸ் அப்டேட் புரோகிராமில் Review your update history என்பதை இயக்கி இதனைக் காணலாம். அடுத்ததாக ஜனவரியில் மைக்ரோசொப்ட் இலவசமாக வழங்கிய மலிசியஸ் சொப்ட்வெயர் ரீமுவல் தொகுப்பினையும் சிஸ்டத்தில் இணைக்க வேண்டும்.

இந்த வைரஸ் ஒரு கணனியை பாதித்தவுடன் *autorun,inf* என்ற பைலைக் காப்பி செய்கிறது. குறிப்பாக,பிளாஷ்டிரைவில் இது கொப்பி செய்யப்படுகிறது. பின் அந்த பிளாஷ்டிரைவ் எங்கெல்லாம் பயன்பத்தப்படுகிறதோ, அந்தக் கணனி அனைத்திலும் இது கொப்பி செய்யப்படும்.

கமராக்களும்,மொபைல் போன்களும் இதற்கு விதிவிலக்கல்ல யு.எஸ்.பி, போர்ட்டில் இணைக்கப்படும்.எந்தச் சாதனத்தையும் இது விட்டு வைப்பதில்லை. பின் என்ற பைல்களை இது பயன்படுத்திக் கொள்கிறது. எனவே விண்டோஸ் இயக்கத்தின் Autorun மற்றும் Autoplay இந்த இரு பைல்களையும் இயக்க விடாமல் முடக்கி வைத்தால் ஓரளவிற்கு இந்த வைரஸிலிருந்து தப்பிக்கலாம்.

இந்த வைரஸ் பாதித்ததற்கான அறிகுறிகள் என்ன? உங்கள் பாஸ்வேர்ட் எடுக்கப்பட்டு மாற்றப்படுவதால், உங்கள் இன்டர்நெட் மற்றும் பிற அக்கவுண்ட்களை நீங்கள் கையாள முடியாது.ஓட்டோமேடிக் பேட்ச் அப் நடைபெறாது. இதனை இந்த வைரஸ் முடக்கி வைக்கிறது. ஏனெனில், அண்மை காலத்திய பேட்ச் அப் பைல் வந்தால் இது பரவ முடியாது .



கணனி செக்யூரிட்டி சம்பந்தப்பட்ட எந்தத் தளத்தையும் இணையத்தளம் மூலம் அணுக முடியாது. மேலே குறிப்பிட்ட செயற்பாடுகளை உங்கள் கணனி காட்டியது என்றால் உடனே மைக்ரோசொப்ட் தரும் மலிசியஸ் சொப்ட்வெயர் ரிமூவல் டூல் (MSRT) யை மைக்ரோசொப்ட் தளத்திலிருந்து இறக்கி இன்ஸ்டால் செய்து இயக்கவும். இது http://support, microsoft.com/kh/962007 என்ற முகவரியில் உள்ள தளத்தில் கிடைக்கிறது.

அந்தத் தளத்திலேயே இதனை எப்படிப் பயன்படுத்துவது என்றும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெளிவாக தகவல்கள் தரப்பட்டுள்ளன. ஒரு அவசரகால அப்டேட் பைல்://www.microsoft.com/technet/securty/Bu-lletin/MS08067,mspx என்ற முகவரியில் கிடைக்கிறது. இதனையும்பயன்படுத்தலாம்.

ஆனால், முதலில் ஒக்டோபர் மாதத்தில் வெளியான பேட்ச் பைலை இன்ஸ்டோல் செய்த-பின் மலிசியஸ் சொப்ட்வெயர் ரிமூவல் டூலினை இன்ஸ்டால் செய்வது மட்டுமே முழுமையான பாதுகாப்பினைக் கொடுக்கும் என மைக்ரோசொப்ட் அறிவித்துள்ளது.

எலும்புத் துண்டுக்காக ஒரு நேர்மையான மனிதன்—தன்னை ஒரு நாயாக ஆக்கிக் கொள்ள மாட்டான்!

– டென்மார்க்

வலம்புரி

# ஈழத்தமிழர்களுக்கு சீனப் பெருந்துயர்

இலங்கை இனவிவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்வதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இலங்கையில் நடப்பது உள்நாட்டு விவகாரம். அது சர்வதேச ரீதியில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டாது என்பது சீனாவின் கருத்தாகவுள்ளது.

இலங்கையில் கடந்த 30 வருடங்களாக இன யுத்தம் நடந்துகொண்டிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகி விட்டன.

இன்னமும் யுத்தம் ஓய்ந்தபாடில்லை. தற்போது வன்னியில் மூண்டுள்ள பெரு யுத்தத்தினால் மக்கள் மரண கண்டத்தில் உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கும்போது இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்வதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவிப்பது எங்ஙனம் நியாயமாகும்?

இலங்கையில் நடப்பது உள்நாட்டு விவகாரம் எனில் அதனைத் தடுத்து நிறுத்துவது யார் பொறுப்பு?

பாதுகாப்புச் சபைக்கு இலங்கை இன விவகாரத்தை எடுத்துச் செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சீனாவுக்கு, இலங்கையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் அதிகாரமாவது இருக்க வேண்டும்.

எதுவுமே இல்லாமல் –நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் எழுந்தமானமாக சீனா எதிர்ப்புத் தெரிவிப்பது ஈழத்தமிழரின் உயிரோடு விளையாடும் அந்தநாட்டின் பொறுப்பற்ற தன்மையை காட்டுவதாகும்.

இதற்கு மேலாக, இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்வதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவிப்பதன் அடிப்படை நோக்கம், இலங்கையில் இடம்பெறும் யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்கள் சீனாவிடம் இருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஆக இலங்கையில் இன யுத்தம் நின்றுபோய் விடுமாக இருந்தால் சீனாவின் ஆயுத விற்பனை வருமானமும் வீழ்ச்சியடையும்.

எனவே இலங்கையை யுத்த நாடாக வைத்துக் கொள்வதன் மூலம் தனக்கு நல்லதொரு ஆயுத சந்தையை சீனா தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

இலங்கை இனவிவகாரம் பாதுகாப்புச் சபைக்கு வருமாக இருந்தால் அதனைத் தமது நாடு ஆதரிக்கும் என அமெரிக்கா அறிவித்திருக்கும் நிலையில் சீனாவின் எதிர்ப்பு, மனித அவலத்தை புரிந்து கொள்ளாத மூடத்தனமாகும்.

நாளாந்தம் வன்னியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் உயிரிழக்கும் துயரச் செய்தியை அறிந்திருந்தும் மேற்போந்த கருத்தை சீனா கொண்டிருப்பது இலங்கை அரசுக்குச் செய்யும் மிகப்பெரும் கெடுதியாகும்.

உண்மையில் இலங்கை மீது யாரேனும் கரிசனை கொள்வார்களாயின் அவர்கள் இலங்கை மண்ணில் சமாதானம் ஏற்பட்டு எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே நினைப்பர்.

அந்த நினைப்பு சீனாவிடம் இருக்குமாயின் இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபைக்கு செல்வதை அந்த நாடு எதிர்க்காதல்லவா?

# வன்னிக்கான மருந்து வகைகள் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளன

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னி மக்களுக்கு தேவையான மருந்து வகைகளை வன்னிக்கு எடுத்துச்செல்வதற்காக திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் அனர்த்த நிவாரண அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

வன்னியில் இயங்கி வந்த புதுமாத்தளன் வைத்திய சாலை மருந்துகள் இல்லாமையால் கடந்த ஒரு வார காலமாக செயலிழந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது எனக்கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருந்துகள் இல்லாததால் கடந்த 14 ஆம் திகதி புதுமாத்தளன் வைத்தியசாலையில் வைத்திய செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு விட்டதாகவும் இது குறித்து மாகாண சுகாதாரப்பணிப்பாளர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரி. வரதராஜா தெரிவித்திருந்தார்.

இது குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் வினவியபோது அவர் கூறியதாவது ,

வன்னி மக்களுக்கு தேவையான 52 வகையான மருந்து வகைகள் ஏற்கனவே திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன. அவற்றை அங்கிருந்து புதுமாத்தளன் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார். (6)

## நிரந்தர அரசியல் தீர்வு காண

# இலங்கையில் இராணுவ அடக்குமுறை அடியோடு நிறுத்தப்பட வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் அறிக்கையில் வற்புறுத்தல்

(புதுடில்லி)

இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இராணுவ அடக்கு முறை அடியோடு நிறுத்தப்படவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

டில்லியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையை அக் கட்சியின் பொதுச் செயலாளர் ஏ.பி.பரதன் வெளியிட்டார். தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதா வது.

சுதந்திரமான வெளியுறவுகொள்கையை மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும். இலங்கை பிரச்சினையை தீர்ப்பதற்கு மத்திய அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கிக் கொண்டே இனப் பிரச்சினையை தீர்ப்பதாக கூறி வருகிறது.

இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண இராணுவ அடக்குமுறை அடியோடு நிறுத்தப்பட வேண்டும். அரசியல் ரீதியாக இனப் பிரச்சினையை சுமுகமாக தீர்க்க நடவடிக்கை எடுத்து ஐக்கிய சுதந்திர நாட்டை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (6)

# கொழும்பு துறைமுகப் பகுதியில் பாரிய குண்டுச்சத்தங்களால் மக்கள் பீதி

## கடற்படை ஒத்திகை என அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று காலையில் பாரிய குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் துறைமுகப் பகுதியில் கேட்ட வண்ணம் இருந்தன.

மக்கள்ஏதோ தாக்குதல் நடை பெறுகின்றது என பதற்றமடைந்தனர் சற்று நேரத்தின் பின் கடற் படையினரின் ஒத்திகை எனஅறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் தான் மக்களின் பதற்றம் தணிந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் சுமார் 7.15மணி வரை தொடர்ச்சியாக இந்தச் சத்தங்கள் கேட்டன.

கொழும்புத் துறைமுகத்தை அடுத்துள்ள பகுதிகளில் திடீரென கடற்படையினரும் குவிக்கப்பட்டு வீதிகளும் மூடப்பட்டிருந்தன.

கொழும்புத் துறை முகத்தின் மீது தாக்குதல் ஒன்று மேற்கொண்டால் அதனை எவ்வாறு முறியடிப்பது என்பது குறித்து போர் ஒத்திகை ஒன்றே நடை பெற்றதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக தெரியவந்தது. (6)

# போர் நடவடிக்கையால் முல்லைத்தீவில் சிறார்கள் உளநலப் பாதிப்பு

## முல்லைத்தீவு பொதுமருத்துவமனை உளநலப் பிரிவு தகவல்

(கொழும்பு)

இலங்கை படையினரால் போர் நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவில் சிறார்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொது மருத்துவமனை உள நலப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை படையினரின் வான் தாக்குதல் , எறிகணைத் தாக்குதல் என்பவற்றினால் உறவுகளைப் பறிகொடுத்தும் தாக்குதல்கள் நடைபெறும் இடங்களில் படுகொலைகளை நேரில் பார்த்தும் அங்குள்ள சிறார்கள் உள நலம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வரப்படும் சிறார்கள் பெற்றோர்களினால் கைகள் இரண்டும் கட்டப்பட்டு கொண்டு வர ப்படும் துயர நிலை தொடர்வதாகவும் மருத்துவமனை விபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் படையினரின் போர் நடவடிக்கை காரணமாக பாடசாலைகள் இயங்காமல் இருப்பதாலும் சிறார்கள் மத்தியில் உளப்பாதிப்புக்கள் அதிகரித்துள்ளதாக உளவளத் துணையாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (6)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு

### பலம்



பலமின்மையே துயரத்திற்கு ஒரே காரணம். நாம் பலவீனர்களாக இருப்பதால் , நாம் கெட்டவர்களாகிறோம். நம்மிடம் பொய்யும், திருட்டும், கொலையும் வேறு பாவச் செயல்களும் இருப்பதற்குக் காரணம் நமது பலவீனமே. நாம் துன்பமடைவதுநமது பலவீனத்தாலேயே. நாம் இறப்பதும் நமது பலவீனத்தால்தான். நம்மைப் பலவீனர்களாக்க ஒன்றும் இல்லாத போது மரணமும் இல்லை , துயரமும் இல்லை.

நமக்கு வேண்டிய ஒரே பொருள் பலமே. உலகத்தின் நோய்க்கு மருந்தும் பலமே. பணக்காரர்களின் கொடுமைக்கு உட்படும் போது ஏழைகளுக்கு கட்டாயம் வேண்டிய மருந்தும் பலமே. படித்தவர்களின் கொடுமைக்கு உட்படும் போது படிக்காதவர்களுக்கு வேண்டிய மருந்தும் பலமே. பாவிகளின் கொடுமைக்கு உட்படும் போது பிற பாவிகளுக்கு வேண்டிய மருந்தும் பலமே.

# இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களின் சேவை மூப்புப் பட்டியல் கல்வியமைச்சால் வெளியீடு

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை உத்தியோகத் தர்களின் சேவை மூப்பு பட்டியல் தயாரிப் பதற்காக 2008ஆம் ஆண்டு சேவையிலுள் ளவர்களால் அனுப்பிய தகவல்களின் அடிப் படையில் தயாரிக்கப்பட்ட பட்டியலை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்விஅமைச்சின் செய லாளரினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

*இலங்கை அதிபர் சேவை உத்தியோகத் தர்களின் சேவை மூப்பு பட்டியல் -2008* தயா ரிப்பதற்காக தாங்கள் அனுப்பிய தகவல் களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட வரைவு எமது www.Moe.gov.lk இணையத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள தங்களது தகவல்கள் முறையாக இல் லாதிருப்பின் அல்லது மறு சீரமைக்கப்பட வேண்டியிருப்பின் அது தொடர்பாக கீழே உள்ள மாதிரிக்கமைய தயாரித்து அதற் குரிய ஆவணங்களுடன் வலயக் கல்விப் பணிப்பாளரின பரிந்துரையுடன் 2009. 03.25 ஆம் திகதிக்கு முன்னர் *உதவிச் செய லாளர் ,அதிபர் கிளை, கல்வி அமைச்சு, இசுரு பாய, பத்தரமுல்லை,* என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*மாதிரிப் படிவம்*

*பெயர்*

தேசிய அடையாள அட்டை இல, மாவட் டம், கல்வி வலயம், தற்போது கடமை யாற்றும் இடம்,form no

தங்களின் விண்ணப்பத்திற்கு எங்களினால் வழங்கப்பட்டுள்ள இலக்கம்)

| மறுசீரமைக்கப்பட வேண்டிய காரணம் | ஆவணத்தில் தற்போது காணப்படும் தகவல் | மறுசீரமைக்கப்படவேண்டிய முறை | ஏனைய விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் *இலங்கை அதிபர் சேவையின் சேவை மூப்பு பட்டியல் 2008* எனக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியலிலுள்ள வடக்கு மாகாணத்தை சேர்ந்த இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களின் வகுப்பு ரீதியாக வருமாறு ,

தரம் 1

பாக்கியதுரை-கிளிவெட்டி, வி.கணே சராசா-பண்டாரிக்குளம்,வவுனியா, என்.சத்தி யநாதன்-பழம்வீதி,யாழ்ப்பாணம், கே.சின் னராஜா-ஆனந்தபுரம்,கிளிநொச்சி, ஏ.சிவ ஞானசுந்தரம்-தாவடி வடக்கு,கொக்குவில், வி.மாணிக்கம்-கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பா ணம், பி.முத்துலிங்கம்-இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்,ஏ.கைலாயபிள்ளை- மீசாலை கிழக்கு,மீசாலை, எம்.பாலசுப்ர மணியம்-மந்துவில் மேற்கு,கொடிகா கம், எஸ்.கந்தசாமி-சங்குவேலி தெற்கு, மானிப்பாய்,எம்.பரமசிவம்-பாலக்காடு, காரை நகர், ஜே.வீரசிங்கம்-சுதுமலைமத்தி மானிப்பாய், ஏ.ஆரோக்கியநாதன்-மன் னார்,கே.அம்பலவாணர்-கரவெட்டி மத்தி, கரவெட்டி,எம்.நாகேஸ்வரி-வைரவப் புளியங் குளம்,வவுனியா,எஸ்.சித்திரவடிவேல்-ஏழா வது மைல் போஸ்ட் ,தொண்டைமானாறு, ரி.இராசலிங்கம்-அரியாலை, எம்.ஜெய தாரா-உக்கிளாங்குளம், வவுனியா, எஸ்.புண் ணிய சீலன்-பலாலிவீதி ,கோண்டாவில், எஸ்.சின்னராஜா- முள்ளியவளை, பி.பேரின்ப நாயகம்-முல்லைத்தீவு,எம்.எல்.றெவல்- மன்னார்,கே.சரவணபவானந்தன்-நாவலர் வீதி, ஆனைப்பந்தி, ஏ.ஸ்ரீகரா-சாஸ்திரி கூழாங்குளம்,வவுனியா,வி.சுகுமாறன்-துன் னாலைவடக்கு, கரவெட்டி, கே.ரஞ்சிதம்- கரணவாய் கிழக்கு, கரவெட்டி, ரி.நவரட்ணம்- துன்னாலைமேற்கு,கரவெட்டி, என்.அரியர ட்ணம்-வவுனியா.

ஆர்.இந்திரராஜா-பூந்தோட்டம் வவு னியா, யு.சின்னத்துரை-வவுனியா, கே.சுந் தரலிங்கம்-வடமராட்சி, எஸ்.அன்ரன்-கே. கே.எஸ்.வீதி, மல்லாகம் , எஸ்.சந்தியாம் பிள்ளை -நானாட்டான் மன்னார், எஸ்.அமல தாசன்-மன்னார், ரி.தவேந்திரராஜா-வட மராட்சி, எஸ்.ஞானலிங்கம்-சரசாலை தெற்கு, சாவகச்சேரி,கே.கதிர்காமசேகரர்-மீசாலை கிழக்கு,ரி.கந்தையா- கச்சாய் வீதி,கொடி காமம், எஸ்.குபேரநாதன்-சுன்னாகம், ரி.கண பதிப்பிள்ளை-கிளிநொச்சி-ஏ.விநாய கமூர்த்தி-கனகராஜன்குளம், வவுனியா- ஜே.சிவக்கொழுந்து-அல்லாரை வடக்கு, மீசாலை,எமிலியம்பிள்ளை-மன்னார், எம். எஸ்.பத்மநாதன்-திருநாவற்குளம், வவு னியா-எஸ்.பாஸ்கரன் -கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம், எஸ்.மகேந்திரன்- கரண வாய் கரவெட்டி, வி.சிவசிதம்பரம்-துணுக் காய் மத்தி,கரவெட்டி,வி.குணசேகரம் -கோப் பாய் மத்தி,கோப்பாய்,வி.சிவபாலன்-சப்பல் வீதி,யாழ்ப்பாணம்.

வி.பாலசுப்ரமணியம்-அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி, ஆர்.குணநாதன்- நீர் வேலி மத்தி நீர்வேலி, ஏ.அகிலதாஸ்-கொக்குவில் கிழக்கு கொக்குவில், ஏ.ஈஸ்வரநாதன்- உரும்பிராய் மேற்கு உரும்பிராய் ,எஸ்.மாணிக் கராஜா-பலாலி வீதி ,கோண்டாவில், எம்.பால சிங்கம்- குடியிருப்பு, வவு னியா.


ஜி. நடராஜா-வேலிக்குளம், வவுனியா, யு ராசையா- கண்டி வீதி, வவுனியா, எஸ்.சிவ நேஸ்வரன்- இணுவில் தெற்கு , சுன்னாகம், எம்.செல்வராசா- கரவெட்டி ,தெற்கு, எஸ். வர தராசசர்மா- கரணவாய் ,கிழக்கு,கரவெட்டி, எம்.வி.கந்தசாமி- மட்டுவில் தெற்கு, சாவ கச்சேரி, எம். வசந்தாதேவி- நாவற்குழி, கைதடி, எஸ்.சிவத்திரி-தபால் அலுவலக வீதி, சாவகச்சேரி, கே. சிவானந்தம்- மீசாலை வடக்கு, கொடிகாமம், ரி. எங்கரசு-நீர்வேலி தெற்கு, கே. செல்வகுமாரன் -கந்தரோடை , சுன்னாகம், பி. பேரம்பலம்- முடவேம்படி சுன் னாகம்.

வி. சன்முகரட்ணம்-தலையாளி , கொக் குவில், வி.ஜெயரத்தினம்-ஆனைக் கோட்டை, என் . வைத்தியனந்தன்- தம்பாளை, பருத் தித்துறை, ரி. கிருஸ்ணகுமார்- திரு நெல் வேலி கிழக்கு, பி. அருணகிரி நாதன்-நாயன் மார் வீதி, நல்லூர், யு. தேவிகா- கோவில் குளம், வவுனியா, என்.சோமஸ் கந்தராஜா- உக்கிலாங்குளம்,வவுனியா, கே. இளங்கோ வன்- பண்டாரிக்குளம் ,வவுனியா,கே. பொன் னம்பலம்-அம்மன் வீதி, கந்தர்மடம்,எவ். எஸ்.ஆர்.சிஅரிய ரட்ணம்-ரம்பைக் குளம்.

பி.நடராஜா-அரியாலை ,யாழ்ப்பாணம் , எஸ்.இராஜேஸ்வரன்-குமிளமுனை , முள் ளியவாய்க்கால், வி.கணபதிப்பிள்ளை- தில்லையபுலம்,கரவெட்டி,கோ. செல்வராசா- இராமநாதபுரம்,கிளிநொச்சி,என்.தியாகராஜா -புதுக்குடியிருப்பு, எஸ்.சேதுராஜா- துன் னாலை வடக்கு, கரவெட்டி, வி.பேரின்ப நாதன் -கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் , எஸ்.சுந்தரேசன்- புலோலி கிழக்கு ,பருத்தித் துறை, பி.ரகுநாதன்-பருத்தித்துறை, எஸ்.கைலாசநாதன் -வடலியடைப்பு, பண் டைத்தரிப்பு. (தொடரும்)

# அப்பாவி மக்கள் படுகொலையில் சூடான் அதிபர் ஈடுபட்டார்

## சர்வதேச நீதிமன்ற அதிகாரி குற்றச்சாட்டு



டார்பூரில் உள்ள பெரிய, அகதி முகாம்களில் உள்ள பொது மக்களை படுகொலை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக சூடா னிய அதிபர் ஓமர் அல் பஷீர் மீது சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் தலைமை சட்ட நட்வடிக்கை அதிகாரி லூயிஸ் மொரேனோ ஒகம்போ குற்றஞ்சாட்டியுள்ளார்.

உதவி நிறுவனங்களை வெளியேற்றுவதன் மூலமாகவும் முகாம்களுக்கான உதவிகளை தடுப்பதன் மூலமாகவும் 20 இலட் சத்துக்கும் அதிகமான அகதிகள் மீது சூடானிய அதிபர் தாக்கு தலை நடத்துகிறார் என்றும் ஒகம்போ தெரிவித்துள்ளார்.

பஷீர் சூடானை விட்டுவெளியே வரும்போது அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (5)

# போப் ஆண்டவரை தரிசிக்க அங்கோலாவில் மக்கள் கூட்டம்

## நெரிசலில் இருவர் பலி

(ஒயாண்டா)

போப் ஆண்டவர் பெனடிக்ட் ஆபிரிக்க நாடான அங்கோலாவுக்கு சென்றுள்ளார். அவர் செயாண்ட் நகருக்கு சென்றார். அங் குள்ள விளையாட்டு மைதானத்தில் அவருக்கு பிரமாண்ட வரவேற்பு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவரை பார்ப்பதற்காக 50ஆயிரத் துக்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர்.

அவர்கள் போப்பாண்டவரை அருகில் சென்று பாக்க முற்பட்டு ஒருவரை ஒருவர் முண்டி யடித்துச் சென்றனர். அப்போது பயங்கர நெரி சல் ஏற்பட்டது. இதில் பலர் கீழே விழுந்த னர். அவர்கள் மீது மிதித்தபடி மற்றவர்கள் சென்றனர்.

நெரிசலில் சிக்கி 2 பேர் பலியானார்கள். 10இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர் பாதுகாப்பு ஏற்பாடுகளை சரியாக செய்யாத தால் தான் நெரிசல் ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (5)

# நாட்டின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்

## எதிர்க்கட்சிகளுக்கு பாக்.ஜனாதிபதி அழைப்பு

(இஸ்லாமாபாத்)

கடந்த காலத்தில் நடந்த கசப்பான சம் பவங்களை மறந்து விட்டு நாட்டின் வளர்ச் சிக்காக ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என எதிர்க்கட்சியினருக்கு பாகிஸ்தான் ஜனாதி பதி சர்தாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் முஷாரப் ஆட்சிக் கலாத் தில் பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரி எதிர்க் கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தன.

இதையடுத்து பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளை மீண்டும் பணியில் அமர்த்த பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டது. உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இப்திகார் சவுத்ரி நேற்று பதவியேற்றார். இதன் கார ணமாக தற்போது உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக உள்ள அப்துல் ஹமீத் தொகாருக்கு இஸ்லாமாபாத்தில் பிரிவு உப சார விழா நடத்தப்பட்டது. இதில் மும்படை தள பதிகள், நீதிபதிகள், அமைச்சர்கள், பிரத மர் கிலானி உள்ளிட்டோர் கலந்து கொண் டனர்.

விழாவில் ஜனாதிபதி சர்தாரி பேசுகை யில்,

நாட்டுக்காக நாம் என்ன செய்துள்ளோம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் நடந்த கசப்பான சம்பவங்களை அனைத்து தரப்பினரும் மறக்க வேண்டும். இது தான் அதற்கு சரியான நேரம். நாட்டின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங் கிணைந்து பாடுபட வேண்டும் என்றார். எதிர்க் கட்சிக ளுடன் இணக்கமாக செயல்பட வேண்டும் என் பதற்காகவே சர்தாரி இவ்வாறு பேசியுள்ள தாக பாகிஸ்தான் அரசியல் வட்டாரங்கள் தெரி வித்தன . (5)

# அமெரிக்கா நிஜமாக மாறினால் ஈரானும் மாறும் என்கிறார் கமெனி

ஈரானுடனான உறவில் ஒரு புதிய ஆரம் பத்தை அமெரிக்கா விரும்புகிறது என்று ஜனாதிபதி ஒபாமா கூறியிருந்தமைக்கு பதில் தரும் விதமாக கருத்து வெளியிட்டுள்ள ஈரானின் அதியுயர் தலைவர் அய துல்லா அலி கமெனி ஈரான் தொடர்பில் அமெ ரிக்கா தனது எண்ணங்களையும் செயற்பாடு களையும் நிஜமாகவே மாற்றிக்கொண்டால் ஈரானும் மாறும் என்று தெரிவித்துள்ளார்.

வெறும் வாய் வார்த்தைகள் என்று குறிப் பிட்டு அவை மட்டும் போதாது என்றார் அவர்.

ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கி வரும் நிபந்தனைகளற்ற ஆதரவு என்று குறிப் பிட்டு அவ்விவகாரம் போன்ற அமெ ரிக்க வெளி யுறவுக் கொள்கையில் நிஜமான மாற்றங்கள் எதனையும் தான் இதுவரை கண்டிருக்க வில்லை என்றும் கமெனி கூறி யுள்ளார்.



அமெரிக்க, ஈரான் உறவில் முப்பது ஆண்டு காலமாக நீடித்துவரும் பகைமை மற்றும் நம்பிக்கையின்மையை முடிவுக்குக் கொண்டுவர தான் விரும்புவதாக ஜனாதிபதி ஒபாமா வீடியோ உரையில் பேசியிருந்ததற்கு அடுத்த நாள் அயதுல்லாவின் கருத்துகள் வெளியாகியுள்ளன.(5)

# தென்னாபிரிக்கா கௌரவ வெற்றி; தொடர் அவுஸ்திரேலியா வசம்

(கேப்டவுன்)

ஹரிஸின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் மூன்றாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சொந்த மண்ணில் கௌரவமடைந்தது.

இப் போட்டியில் தோல்வியடைந்த போதும் அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட்,2 இருபது -20 மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடு கின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கிய நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 19ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ் திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 209 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ஹட்ரிச் 55,ஹடின் 42, ஜோன்சன் 35,ஹயூக்ஸ் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச் சில் ஸ்ரையன் 4,ஹரிஸ் 3,நிற்னி 2 விக்கெட்டுக்களையும் மோர்கல் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 651 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் டி வில்லியர்ஸ் 165,பிறின்ஸ் 150 அணித்தலைவர் கலிஸ் 102 ஓட்டங்களையும் அறிமுக வீரர் மோர்கல் 58 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் ஜோன்ஸன் 4,ஹில் பென்ஹயூஸ்,ஹட்ரிச் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சிடில், மைக்டொனால்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 443 ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நான்காம் நாளான நேற்று சகல விக்கெட்டுக்களையுமிழந்து 422 ஓட்டங்களை மாத்திரமெடுத்து இன்னிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 103 பந்துகளில் (11 பவுண்டரிகள்,5 சிக்ஸர்கள் உட்பட) 123 ஓட்டங்களையும் மைக்டொனால்ட் 68,ஹட்ரிச் 54 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் போல் ஹரிஸ் 6 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன் 3விக்கெட்டுக்களையும் பதம் பார்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி சொந்த மண்ணில் தொடரை முழுமையாக இழப்பதை தவிர்த்து கௌரவமடைந்தது.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றியை உறுதி செய்த ஹரிஸ் ஆட்டநாயகனாகவும் தொடரில் சகல துறையிலும் ஜொலித்த அவுஸ்திரேலிய அணி வீரர் ஜோன்சன் தொடர் நாயகனானார்.

# இங்கிலாந்து பெண்கள் அணி உலக கிண்ணத்தை சுவீகரித்தது

## இறுதிவரை போராடிய நியூசிலாந்து பரிதாபம்






(சிட்னி)

ஐ.சி.சி. பெண்கள் உலகக்கிண்ண தொடரின் இறுதிப்போட்டியில் நியூசிலாந்து பெண்கள் அணியை வீழ்த்தி இங்கிலாந்து பெண்கள் அணி சம்பியனானது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவந்த ஐ.சி.சி.பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று சிட்னியில் நடைபெற்றது.

இப்போட்டியில் நியூசிலாந்து- இங்கிலாந்து பெண்கள் அணிகள் மோதின. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து பெண்கள் அணி 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டூலன் 48 ஓட்டங்களையும், அணித்தலைவி ரிப்பென் 30,பிறவுன் 25,மைக்கிலேசன் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷாவ் 4 விக்கெட்டுக்களையும், மார்ஷ் 2விக்கெட்டுக்களையும், புரூன்ட், குகா, கொல் வின் மற்றும் எட்வோட்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 167 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து பெண்கள் அணி 46.1 ஓவர்களில் 6விக்கெட்டுக்களை யிழந்து 167 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலகச் சம்பியனானது.

இதில் அற்கின்ஸ் 40, எஸ்.ஜே.ரெய்லர் 39 ஓட்டங்களையும் எஸ்.சி.ரெய்லர் 21 ,ஷாவ் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டூலன் 3 விக்கெட்டுக்களையும் மாஷன் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் இங்கிலாந்து பெண்கள் அணியின் வெற்றிக்கு சகல துறையிலும் ஜொலித்த ஷாவ் ஆட்டநாயகியாகத் தெரிவானதுடன் தொடர் நாயகி விருதை இங்கிலாந்துப் பெண்கள் அணியில் எஸ்.சி.ரெய் லர் வென்றார்.

இதன் மூலம் இங்கிலாந்து அணி 3ஆவது முறையாக (1973,1993, 2008/09)கைப்பற்றியது.

இத் தொடரின் 3ஆவது இடத்தை இந்தியாவும், 4ஆவது இடத்தை அவுஸ்திரேலியாவும் கைப்பற்றின.

5ஆவது இடத்தை மேற்கிந்திய தீவும் 6 ஆவது இடத்தை பாகிஸ்தானும் பெற்றன.

7ஆவது மற்றும் 8ஆவது இடத்தை முறையே தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் பெற்றன.

# ஐ.பி.எல். 'இருபது-20' தொடரை வெளிநாட்டுக்கு மாற்ற முடிவு

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இரண்டாவது "இருபது-20" தொடரை வெளிநாட்டில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களு க்காகவே இவ்வாறு மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐ.பி.எல். அமைப்பின் தலைவர் லலித் மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகம்,ஐ.பி.எல் அணிகளின் உரிமையாளர்கள் ஆகியோருடன் நேற்று ஆலோ சனைக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் இந்திய மத்திய உள்துறை அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இடையூறில்லாமல் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் போட்டியை முழுமையாக நடத்த ஆலோசிக்கப்பட்டது. ஆலோசனை முடிவில், தேர்தலின் போது போட்டிகளை நடத்த முழுமையான பாதுகாப்பு அளிக்க முடியாது என்ற காரணத்தி னால் ஐ.பி.எல். தொடரை வெளிநாட்டில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இடமாற்றப்பட்டாலும் போட்டி அட்டவணையில் எந்தமாற்றமும் இருக்காது என்றார் லலித்மோடி. இங்கிலாந்து ,தென்னா பிரிக்கா ஆகிய இருநாடுகளும் போட்டிகளை நடத்த பரிசீலிக்கப்பட்டுவருவ தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (41)





1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதி நடைபெற்ற இத் தொடரில் முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் இலங்கை அணி மோதியது.

இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 234 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்களில் 9விக்கெட்டுகளை இழந்து 228 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.


பாலா

இதன்மூலம் இலங்கை அணி 6ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதில் முரளிதரன் 10ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 35 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து சிறப்பாக ஆடிய காம்பி லை (86) ஆட்டமிழப்பு செய்து ஒரு விக்கெட்டை

முதலாவது போட்டியில் வெற்றிபெற்ற நிலையில் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 12ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தானுடன் மோதியது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களை எடுத்தது.


இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 51 ஓட்டங்களைக் கொடுத்து அமீர் சொகைல்(85) அணித்தலைவர் ரமீஸ் ராஜா (12) ஆகியோரை வெளியேற்றி 2விக்கெட்டுக்களை பதம் பார்த்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 8விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் 5 பந்துகளை எதிர்கொண்டு 1 சிக்ஸர் உட்பட 7ஓட்டங்களைப் பெற்றார். (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-46



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத்தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல் லும் கட்டங்களுக்கும் இதேவிதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத்தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1முதல்9வரையான எண்களை பயன்படுத்தவேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



மாநகர சபை, யாழ்ப்பாண...



# ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து தே.மு.தி.க. பிரமுகர் தீக்குளிப்பு

ஈழத்தமிழர்களைக் காக்கக்கோரி மேலும் ஒரு தே.மு.தி.க. பிரமுகர் தீக்குளித்து உயிரிழந்துள்ளார். இது தொடர்பாக தமிழகத்தில் வெளியான செய்தி வருமாறு,

புதுக்கோட்டை மாவட்டம் கொத்தமங்கலம் பகவான் தெருவைச் சேர்ந்தவர் பாலசுந்தரம் (வயது 35). தே.மு.தி.கவின் கிளைச் செயலாளராக உள்ளார். சமையல் தொழிலாளியான இவர் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என்று எந்தக் கட்சி சார்பில் நடந்தாலும் கட்சி பாகுபாடின்றி கலந்து கொள்வார்.

கீரமங்கலம், கொத்தமங்கலம், வடகாடு ஆகிய ஊர்களில் ஈழத்தமிழர்களின் அவல நிலையை விளக்கும் தட்டிகள் வைக்கப்பட்டிருந்தது. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் அனுமதி பெற்று வைக்கப்பட்டிருந்த இந்த தட்டிகளை காவல்துறையினர் அகற்றினர். இதை தாங்க முடியாத பாலசுந்தரம் தனது கட்சிக்காரர்களிடம் சொல்லி வருத்தப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு நாட்களாக ஈழத்தமிழர்களின் நிலைமை குறித்து தனது குடும்பத்தாரிடமும் கட்சிக்காரர்களிடம் கவலை தெரிவித்து வந்த பாலசுந்தரம் நேற்று மதியம் 12 மணி அளவில் தனது வீட்டிற்கு வெளியே ஓடிவந்து மண்ணெண்ணெயை தன் மேல் ஊற்றி தீயிட்டுக்கொண்டார்.

இதைப் பார்த்த அப்பகுதி மக்கள் பாலசுந்தரத்தை காப்பாற்ற முயன்றனர். ஆனால் சிறிது நேரத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மரணம் அடைந்த பாலசுந்தரத்தின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக கொத்தமங்கலத்தில் வைக்கப்பட்டுள்ளது. பாலசுந்தரம் உடலுக்கு தமிழின உணர்வாளர்கள், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், அரசியல் கட்சியினர் என பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வன்னி பாதுகாப்பு...

மற்றும் பீரங்கி என்பன வீழ்ந்துவெடித்துள்ளன. இதில் 9 சிறுவர்கள் உட்பட 34 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

வாணி (வயது 5), க.அருச்சுனன் (வயது 6), ம.விதுசன் (வயது 3), கே.மருதன் (வயது 7), கி.தேவகி (5 மாதம்), வி.தேனுஜா (வயது 3), சு.விதுரன் (வயது 6), ம.மதிநிலா (வயது 10) து.தேவதீசன் (வயது 12), க.கனகம்மா (வயது 78), து.நாகேஸ்வரி (வயது 26), வீ.நெல்சன் குமார் (வயது 34),அ.துரைராசா (வயது 67), த.அருச்சுனன் (வயது 60), பெ.அருமைநாயகம் (வயது 33), வை.அன்னமேரி (வயது 56), இ.அன்னமலர் (வயது 55), தே.விஜயமாலா (வயது 28), க.விஜயகுமாரி (வயது 35), வே.ரஞ்சன் (வயது 38), மா.மரியம்மா (வயது 47), க.மணிமாறன் (வயது 55), சி.மருமலர் (வயது 79), வீ.மரியம்மா (வயது 68), த.தீசன்குமார் (வயது 74), வீ.மரிஸ்லாராணி (வயது 56), வ.காருண்யா (வயது 23), மா.இருதயதாஸ் (வயது 72) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 25 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதே உயிரிழந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விபரம் வெளியாகவில்லை. (எ-1)

## தமிழ் மக்களின் விவகாரத்...

இந்த விவாதத்தை சீனா, ரஷ்யா மற்றும் ஜப்பான், உகண்டா,துருக்கி, வியட்நாம், லிபியா ஆகிய ஏழு நாடுகள் எதிர்த்து நின்று இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றன.

15 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் ஏனைய நாடுகள் இலங்கையில் தோன்றியுள்ள மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பாக விவாதிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றன.

எனினும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து தமது தரப்பு வாதங்களை முன்வைக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சகம் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைக்கான தூதரகத்தைக் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் விவாதிக்கப்படுவதை தடுக்கும் முயற்சிகளில் சீனாவுடன் ரஷ்யாவும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ள நிலையில் இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பான விவாதங்களை தடுக்கும் முயற்சிகளை சீன அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது சீனாவின் இந்த முயற்சியில் ரஷ்யாவும் மேலும் சில ஆசிய நாடுகளும் இணைந்துள்ளன.

கடந்த மாதம் மெக்சிக்கோ கொண்டு வந்த தீர்மானத்தை ரஷ்யா எதிர்த்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இரணைப்...

உறுப்பினர்களின் சடலங்கள் உட்பட ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ள தாகவும் பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் கூறியது.

மோதல்கள் தொடர்பில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில், இரணைப்பாலை மற்றும் புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளிலேயே இரு தரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் புலி உறுப்பினர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (ச-5)

## புலிகளின்...

முல்லைத்தீவில் மறைந்திருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலித் தலைவர்கள் மோதல் தவிர்ப்பு வலயத்தில் சஞ்சரித்தமையை பொதுமக்கள் அவதானித்துள்ளதாக இராணுவ தகவல்கள் குறிப்பிடுகின்றன.

விடுதலைப்புலிகளிடமுள்ள பகுதிகளை பூரணமாக மீட்டெடுப்பது குறித்து கால வரையறைகளை வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ஓரிரு வாரங்கள் அல்லது மாதங்களில் விடுதலைப் புலிகளிடமிருந்து முற்றாக பகுதிகளை மீட்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச-5)

## ஐ.நா. மனித உரிமைச்...

தொடரில் கலந்து கொள்ளும் பலவிதப்பட்ட அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களின் கண்டனத்திற்கும் இலங்கை ஆளாகியுள்ளதாக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் பிரதான கூட்டத்தொடர் நடைபெற்றுகொண்டிருக்கும் அவ்வேளையில் ஐக்கிய நாடுகள் சபை மண்டபத்திற்குள் அனைத்துலக அரச சார்பற்ற வேறு நிறுவனங்களின் கூட்டங்களும் நடைபெறுகின்றன.

இவற்றில் குறிப்பாக கடந்த திங்கட்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்களில் அல்காக நிறுவனம்,ஹிமாலயன் கலாசார நிறுவனம், அனைத்துலக சர்வநம்பிக்கை ஆகிய அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களினால் இரு முக்கிய கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இக் கூட்டங்களில் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமும் மனித பாதுகாப்பும், தென் ஆசியாவில் மக்களின் கூட்டாட்சியை நோக்கி போன்ற தலைப்புக்களில் விவாதங்கள் இடம்பெற்றன.

கூட்டங்களில் பல அனைத்துலக மனித உரிமையாளர்கள், பேராசிரியர்கள், அரசியல் வாதிகள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள், ஐரோப்பா, பிரித்தானியா, அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து வருகை தந்து உரையாற்றியிருந்தனர்.

இதில் மனித உரிமை மீறல் மற்றும் சுயநிர்ணய உரிமை போன்ற விடயங்கள் வேறுபட்ட விவாதங்களுடன் ஆராயப்பட்டன.

இந்நிகழ்ச்சிகளில் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்களின் மிக நீண்டகால அங்கத்தவரும், தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளருமான ச.வி. கிருபாகரனும் உரையாற்றியிருந்தார்.

அத்துடன் பிரபல அரசியல் ஆய்வாளரும் இளைப்பாறிய சிவில் நிர்வாகியுமான வன்னித்தம்பி கனகரட்னம், மூத்த ஊடகவியலாளர் கனகரவி, எஸ்.ஜே.இமானுவேல் அடிகளாருடன் வேறுபல தமிழ் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நவநீதம்பிள்ளை இந்தியா...

இந்திய விஜயம் அரசியல் அவதானிகளாலும் மனித உரிமை ஆர்வலர்களாலும் கூர்ந்து அவதானிக்கப்படுவதுடன் எதிர்பார்ப்புகளையும் தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் அயல்நாடும் பிராந்தியத்தில் வல்லரசுமான இந்தியாவுடன் இலங்கையின் மோதல் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் மனித உரிமைகள்,மனிதாபிமான நெருக்கடி என்பன தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் நவநீதம்பிள்ளை ஆராய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகிறது.

இந்த விஜயத்தின்போது இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுடனும் கலந்துரையாட விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் நேற்று இந்திய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை இவர் மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது தேசிய, பிராந்திய, சர்வதேச மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுடனும் இந்திய மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தைகளை அவர் நடத்தவுள்ளதாக ஜெனீவாவிலுள்ள அவரின் அலுவலக உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புதுமாத்தள...

புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் செயல்பட்டுவரும் கடைசி மருத்துவ உதவி மையம் புதுமாத்தளனில் செயல்பட்டு வரும் இந்த தற்காலிக மருத்துவமனைதான்.

அதேவேளை தாங்கள் திரும்பத் திரும்பக் கேட்டிருந்தும் கூட மயக்க மருந்து, இரத்தம் ஏற்றப் பயன்படும் பைகள் ஆகியன இந்த முறையும் வந்திருக்கவில்லை என்று டாக்டர் டி.வரதராஜா குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிக்குண்டுள்ள மக்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களை தொடர்ந்து அனுப்பி வருவதாக அரசாங்கம் கூறியுள்ளது. (ச-5)

## வன்னிச்...

பெரும்பாலான பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன. புலிகள் மீது இராணுவம் கடும் தாக்குதலை நடத்தி வருகிறது. சண்டை தொடர்பாக என்னும் சில நாட்களில் முக்கிய தகவல்கள் வெளியாகும் என்றார். (ச-5)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்



வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அமிர்தம் தம்பதியினரின் ஏகபுத்திரனும் வேலை முடிப்பிள்ளையார்ஆலயத்தில் நீண்டகால பொருளாளராகவும் விளங்கிய கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார்கள்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் கருணாகரன் (France), கருணாவதி (Germany), சாரதாம்பிகை (Jaffna), தயாபரன் (France), பிரபாகரன் (France), பற்குணன்(Canada), பற்பரா (Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜகிதமாலா (France), சிவநேசபிள்ளை(Germany), மகேந்திரன் (அதிபர்-கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்/யாழ்ப்பாணம்) சந்திரகுமாரி(France), நளாயினி(France), மணிமாலா(Canada), ஸ்ரீமந்நடராஜன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

தீபன், தேனுகா, பார்த்தீபன்(France), ராகுலன், ரூபிகா(Germany), தனுஜா, அபிநயா(Jaffna), தயாநிதி, சந்துரு, நிருபன், நிருசன், ஜனனி (France), மிதுலா, பிரமிலா, சாயிரா(France), பிரியன், மாதுமி (Canada), மயூரகீதன், ஹரணியா(Colombo) ஆகியோரின் அன்புப் பேரனாரும்,

காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கண்ணம்மா, இரத்தினம் மற்றும் ஞானாம்பிகை, மரகதம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இராசம்மா, சின்னத்துரை, சீவரத்தினம், சிவசுப்பிரமணியம், பாலசிங்கம், சிவலிங்கம், பாக்கியலட்சுமி, முருகேசு (குணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். காலஞ்சென்றவர்களான சிவசரணம், பவசிங்கம் ஆகியோரின் உடன்பிறவாத சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00க்கு இடம்பெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

139, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021-222-6754

தகவல்:
மு.மகேந்திரன் (மருமகன்)
மக்கள், மருமக்கள்.

(2423)


## தமிழ் மக்களின் பிரச்சினையில்...

இது தொடர்பாக இந்தியாவில் இருந்து ஒளிபரப்பாகும் சி.என்.என்.ஐ.பி.என். தொலைக்காட்சிக்கு பா.நடேசன் வழங்கிய நேர்காணலின் முக்கிய பகுதிகள் வருமாறு,

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் தடையாக இருப்பதாக அரசாங்கம் தெரிவிப்பது தொடர்பாக உங்களின் கருத்து என்ன?**

முதலில் 'சிக்கியுள்ள மக்கள்' என்ற சொல் பயன்படுத்தப்படுவது முறையானது அல்ல. இது அவர்களின் நிலம் அவர்கள் தலைமுறை தலைமுறையாக அங்கு வாழ்ந்துவருகின்றனர்.

சிறிலங்கா அரசு அந்த மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து துரத்தும்வரை அங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

அவர்கள் சிக்கியுள்ள மக்கள் அல்ல. தமது பழைய வாழ்க்கையை மீண்டும் பெற்றுக் கொள்ள அவர்கள் போராடி முயற்சித்து வருகின்றனர்.

**பிரபாகரன் இப்போது எங்கே இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்த முடியுமா?**

தலைவர் இங்கு எமது மக்களுடன் தான் வாழ்கிறார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

**தற்போதைய சிக்கலில் இந்தியாவின் நிலைப்பாட்டை விடுதலைப்புலிகளால் மாற்ற முடியுமா? இது தொடர்பாக உங்களின் கருத்துஎன்ன?**

இந்தியாவின் நலன்களுக்கு எதிராக நாம் எப்போதும் செயற்பட்டதில்லை. அவ்வாறு செயற்படும் நோக்கமும் எமக்குக் கிடையாது. இந்தியாவின் தென்முனையினது பாதுகாப்பு, தமிழீழ மக்களின் அரசியல் நல்வாழ்வோடும் பாதுகாப்போடும் தான் பின்னிப் பிணைந்துள்ளது.

**இந்திய அரசின் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் விரும்புவாரா?**

நிபந்தனைகள் அற்றதும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை உள்ளடக்கிய அரசியல் தீர்வை கொண்டதுமான பேச்சுக்களில் ஈடுபட நாம் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

இந்தப் பிராந்தியத்தின் வலிமைமிக்க நாடு இந்தியா. அது எங்களின் நண்பன். இந்தியா எப்போதும் எமது பக்கத்தில்இருந்து தமிழர் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

**தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையை தமது அரசியல் நலன்களுக்கு பயன்படுத்தி வருவதாக விடுதலைப் புலிகள் கருதுகின்றார்களா?**

உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாக எல்லாக் கட்சிகளும் மாறுபட்ட கொள்கைகளை கொண்டிருப்பது உண்டு. ஆனால் அவை தொடர்பாக நான் கருத்துக் கூறுவது பொருத்தமானதாக இருக்காது

இருந்தபோதிலும் ஈழத்தமிழ் மக்களுக்காக எல்லாத் தமிழக மக்களும் ஒன்றிணைந்து இருப்பது தமிழீழ மக்களுக்கு மகிழ்வைத் தருகிறது.

இன்று ஈழத்தமிழ் மக்களின் பலமாக இருப்பது தமிழக மக்களினதும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களினதும் ஆதரவுகள் தான் என்றார் பா.நடேசன். (எ-1)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.